# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு மாசி மாதம் 11-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 6-ம் இலக்கம்


## இல்லறம் நலமுறப் பத்தாவுக்கும் பத்தினிக்கும் பத்துக் கற்பனைகள்

('சர்வவியாபி' ஆசிரியர் வண. D. S. லூர்துசாமி, D. C. L.)

பிள்ளைவளர்ப்பு, அன்புடைமை, பத்தினித்தன்மை, பிரியாமைபோன்ற யாவர்க்குந் தெரிந்த சதிபதிகளின் பெருங் கடமைகளோடு நடைமுறைக் கேற்ற பல ஒழுங்குகளும் உள. வண. ஏ. ஜே. வியானே என்ற அறிஞர் கூறும் ஒருசில அறிவுரைகளோடு வேறுசிலவற்றைச் சேர்த்து, பத்தாவுக்கும் பத்தினிக்குமுரிய "பத்துக் கற்பனைக"ளாக உருவாக்கி இங்கு வழங்குகின்றோம்.

### I. பத்தாவுக்கு

1. உனது திருமணத் தினத்தன்று உனது மனைவிக்கு என்னமதிப்பும், மரியாதையும் காட்டினையோ அதையே இன்றும்காட்டு.
2. உனக்குப் பரிமாறப்படும் உணவு தானாகவருவதில்லை; உனதுமனைவி கஷ்டப்பட்டு, தீயில்தானும்வெந்து, பொருட்களையும் வேகவைத்துச்சமைத்துக்கொண்டு வந்தது என்பதை எண்ணி, அங்கீகாரம் செய்து அவளைப்பாராட்டும் வகையில் ஒருவார்த்தைசொல் அல்லது செயலால் ஓர் அறிகுறி காட்டு.
3. உனக்குவரும் பிரச்சினைகளில் முடிவுகாண உனதுமனைவியை ஒதுக்கிவைத்துவிடாதே; அவளையும்நினைத்து, அழைத்துக் கலந்தாலோசி. உனது அலுவல்களைப்பற்றி அவளிடம்சொல்.
4. எப்பொழுதும் தீமை, தீமை என்றுஎண்ணிச் சமுசயித்து அதைவிலைகொடுத்து வாங்காதே. உனதுமனைவியிடம் எவ்விதநடத்தையை எதிர்பார்க்கிறாயோ, அதேநடத்தையை நீயும் கடைப்பிடித்துநட.
5. உனதுவருவாயைப்பற்றி உனதுமனைவியிடம் ஒருபோதும் பொய்சொல்லாதே. குடும்பவருமானத்தைப்பற்றி மனைவியிடம் ஒன்றுமே தெரிவிக்காத அல்லது பொய்பேசுகிறகணவனைக் கடவுள் கண்டனம்செய்து தண்டிப்பார்.
6. உனதுமனைவியின் பிறந்தநாள், பெயர்கொண்ட பாதுகாவலர்நாள், உனதுதிருமணத்தின் ஆண்டுதினம் முதலியவற்றை மறவாதுசிறப்புச் செய்.
7. உனதுமனைவியோடு காரசாரமான உரையாடலில்ஈடுபட்டுத் தர்க்கம்செய்யாதே. இறுதியில் நீதான்தோல்வியுறுவாய்; ஏனெனில், எவ்வளவுநேரம் பேசினாலும், கடைசியில் ஒருவார்த்தை சொல்லிவிட்டுத்தான் உன்மனைவி அடங்குவாள்.
8. வெளிவீட்டார் முன்னிலையில் உன்மனைவியைத் திட்டாதே; அதனால் உன்மனைவியின் மதிப்புமட்டுமல்ல, உன்மதிப்பும்கெடும்.
9. பெற்றபிள்ளைகள் முன்னிலையில்கூட உன்மனைவியை வையாதே; ஏனெனில் அது அவர்கட்குத் துர்மாதிரிகை; மேலும்அவர்கள் உன்னைத்தான் கேவலமாகஎண்ணுவார்கள்; அன்னைக்கு அனுதாபம்காட்டுவார்கள்.
10. சமயாசமயம் உன்மனைவியைப் பார்த்து, "நீ சாப்பிட்டாயா?" "உடல் சுகமாயிருக்கிறதா?" "நன்றாய்த் தூங்கினாயா?" என்பது போன்ற உபசரிப்பு வார்த்தைகள் சொல்லும்பழக்கத்தை மேற்கொள்.

### II. பத்தினிக்கு

1. சதாநீயே பேசிக்கொண்டிராதே; உன் கணவனையும் பேசவிட்டுக் காதுகொடுத்துக்கேள்.
2. அவருக்கு நல்லஉணவு சமைத்துவைத்து, வீட்டைச்சுத்தமாகவும், ஒழுங்காகவும் வைத்திரு.
3. அவர் வேலைசெய்துகொண்டிருக்கும் வேளையில் சென்று அவசரமின்றி அவரைத் தொந்தரவு செய்யாதே.
4. உனதுஉற்றார், சுற்றுப்புறத்தார்மீது ஆதாரமற்ற வதந்திகளைக் கிளப்பிவிட்டு வேடிக்கைபாராதே.
5. மற்றமனிதர்கள்முன் உன் கணவனை வெளிப்படையாகப் புகழ்ந்துகாட்டாதே; மௌனமாக உனதுசெயல்முறையால் அவரைமதித்து மரியாதை காட்டு.
6. உனதுகணவனின் குற்றங்குறைகளைச் சகித்து, பொறுமையாய் நடந்துகொள்; சமயாசமயம் அவரதுநற்குணங்களைப்பற்றி அவரிடம் பாராட்டிப்பேசு.
7. அவரைக்கண்டிக்க வேண்டியிருந்தால், உடனே மரியாதையாய்க் கண்டி; ஆனால், உடனே அதை மறந்துவிடு.
8. அவரை உன்வீட்டுவேலைக்காரனைப் பாவித்துப் பணிவிடைசெய்யச் சொல்லாதே.
9. ஆடைஆபரணம்போன்ற அணிவகைகளில் அளவுமீறிய ஆர்வம்கொள்ளாதே; உனது முக்கியகவனம் குடும்பசவரட்சணையில் செல்லட்டும்.
10. சமயாசமயம் உனதுகணவனைத் தனித்திருந்து சிந்திக்கவிடு; அச்சமயங்களில் அவரை ஒருபோதும் தொந்தரவுசெய்யாதே.

இப் 'பத்துக்கற்பனைகளை'ச் சதிபதிகள் தமது தினசரிநடைமுறையில் கடைப்பிடித்து வந்தால், அவர்களின் இல்லறம் நாளுக்கு நாள் மேன்மேலும் நலமுற்று இன்பம்பொங்கும். இனிய அறமாக (இனியவாழ்வாக) இருப்பதைக்கண்டு களிப்புறுவர்.

## ரோமைநகரின் தேசியகோவில்கள்

ரோமைநகரிலே உலகிலுள்ள இருபதுக்குமேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த கத்தோலிக்கர் தங்களுக்கெனத் தேசியகோவில்களைக் கொண்டிருக்கின்றனர். அதனால் அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயம்போலும் அந்நகரின் பேராலயங்களைத் தரிசிக்கச் சென்று அங்குதங்கியிருக்கும் தரிசகர்கள் ஞாயிற்றுக்கிழமைகளிலே திவ்வியபூசைகாணத் தங்கள் தேசியகோவில்களையே அதிகமாக நாடுகின்றார்கள். அதற்குக் காரணம் அவற்றின் சூழ்நிலையும், பாஷையும் அவர்களுக்குச் சாதகமாயிருப்பதேயாகும்.

ஆயினும் ரோமைநகர் தேசியகோவில்களால் தேங்கியிருக்கிறதென்பதையும், நித்தியநகரானது திருச்சபைச்சரித்திரத்தினதும், சர்வசாதாரணத்துவத்தினதும் எடுத்துக்காட்டுகளாகப் பிறநாடுகளைச்சேர்ந்தமக்களை பெருமையுடன் கணிக்கிறதென்பதையும் சிலர்அறிந்துகொள்வதில்லை. உதாரணமாகப் போலிஷ்மக்களது துக்ககரமும், அடக்கிக் கொள்ள முடியாததுமான சரித்திரத்தைக் கடந்த400 ஆண்டுகளாக அங்குஇருந்துவருகின்ற அவர்களது தேசியகோவிலான அர்ச். ஸ்ரனிஸ்லாஸின் ஆலயத்தின்மூலம் தொடர்பாகக்கண்டறியலாம். போலாந்தைத் துருக்கியரிடமிருந்தும், சுவீடனியரிடமிருந்தும், கடைசியாக ருஷியரிடமிருந்தும் காத்துவைக்குமாறு இத்தனைநூற்றாண்டுகளிலும் இந்தக்கோவிலிலே செபங்கள் செய்து ஒப்புக்கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. கால, இடப் பொருத்தத்தினால்போலும் இந்தக் கோவில் இத்தாலிய கம்யூனிஸ்த கட்சியின் தலைமை ஸ்தானத்திலிருந்து சுமார் 20 யார் தூரத்திலே இருந்துவருகிறது.

சான்சில்பெஸ்ரோ என்ற ஆங்கிலகத்தோலிக்கரின் தேசியகோவில் பிரதமதபாற்கந்தோரை அடுத்திருக்கிறது. இது அர்ச். ஸ்நாபகஅருளப்பரின் சிரமென்று நம்பப்படும் திருப்பண்டம் ஒன்றைக் கொண்டிருக்கின்றது. ஐரிஷ்கத்தோலிக்கர் ரோமைநகரிலே இருதேசியகோவில்களைக் கொண்டிருக்கின்றனர். இவற்றில் சான்பற்றிஸியோகோவில் ஐரிஷ் அகுஸ்தீனார்சபைக் குருமாராலும், சான்இஸிடோரோகோவில் ஐரிஷ் பிரான்சிஸ்கன்சபைக் குருமாராலும் பரிபாலிக்கப்படுகின்றன. அமெரிக்கரின் தேசியகோவிலான சந்தாசூஸன்னகோவில் ஐக்கியஅமெரிக்கதேசத்திலுள்ள ஓர்பங்குக்கோவிலுக்கு அதிகம்சரியொத்ததாய் இருக்கின்றது. இதனைப் பாவிலுவானவர் சபைக் குருமார் கண்காணித்து வருகின்றனர்.

இவைகளைத்தவிர கிரேக்கர், மெக்சிக்கர், ருஷியர், ஹங்கேரியர், ஸ்பானியர், பிரான்சியர், ஜேர்மனியர், போர்த்துக்கேயர் முதலாம் சாதியினரும் தங்கள் தேசியகோவில்களை ரோமைநகரில் கொண்டிருக்கின்றனர். மெக்சிக்க கத்தோலிக்கரின்கோவில் குவாடலூப்மாதாபேரால் நவமாகக் கட்டியெழுப்பப் பட்டுள்ள அதிகம்இக்காலமாதிரியான தேசியகோவிலாகும். ஹங்கேரியரின் தேசியகோவில்தான் அதிகம்புராதனமானது, இதுசாந்தோஸ்ரிபானோ வென்று அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோமைக் கண்ணாடி

— வண. நீ. மரியசேவியர் —

## 1. அரசியல்வானில் அலைகள் :

எங்கும்அமைதி நிலவியிருந்தது. புனிதமானது. சந்தர்ப்பம் எப்போதும் கிடைக்கக்கூடியதல்ல. இவைகள்தான் அதற்குக் காரணங்கள், உண்மை. ஆனால், கருதினால் ஒத்தாவியானிஆண்டகை அந்தஅமைதியின் அடித்தளத்திலே குடியிருந்த கவலையைக்கண்டார். கவலையின் காரணத்தைக்கண்டார். காரணத்தின் அலங்கோலத்தை — நச்சுத்தன்மையைக் கண்டார். கவலையே துணையாகவாழும் அம்மக்கள் அகதிகள், நாடற்றவர்கள், உறவினரைஇழந்தவர்கள். பொதுஉடைமையில் சொர்க்க வாழ்வென்று கூறுகின்றார்களே, அதைப்பருகி, உண்மையைஉணர்ந்தவர்கள், அவ்வளவு உள்ளங்களும். "பனிமயமாதா" ஆலயத்தில் நிறைவேறிக்கொண்டிருந்த திவ்வியபூசைப்பலி முடிவுற்றது. கருதினால் ஒத்தாவியானி ஆண்டவரின் சொற்பொழிவு அமைதியின் ஆழத்தைக் கலைத்தது...... "யுத்தத்தின் கொடுமையைப் பட்டுணர்ந்த உள்ளங்களிலும்பார்க்க வேறுயாரும் அதிகமாகச் சமாதானத்தை விரும்புவார்களா?" சமாதானம் சமாதானம் என்று பேச்சளவில்மாத்திரம் கூறுகின்றான் கொலைஞன். அந்தப் "புதிய அந்திக்கிறீஸ்துவுடன் கைகுலுக்குவது மாத்திரமல்ல, யார்முதலாவதாகக் கைகொடுத்துப் புன்முறுவல் பரிமாறலாம் என்றுபார்ப்பதற்கும்அவசர அவசரமாக ஓடுகின்றனர் [மேற்கத்திய அரசியற் தலைவர்கள்], கிறீஸ்தவர்களை நாசமாக்கி இறைவனை அவமதிப்பவனுக்குப் புன்முறுவலும், புகழும் கொடுப்பதா? சுதந்திர நாடுகளிடையே அந்திக்கிறீஸ்துவின் வருகைக்கு வழிகோலுபவர்களுடன் சிநேகஉடன்படிக்கைசெய்ய ஆசிக்கலாமா? கிறீஸ்துநாதர் இன்னும்ஒருதடவை துப்பப்பட்டு, முள்முடி சூட்டப்பட்டு, சிலுவையில் அறையப்படும்பொழுது, நட்புறவுகொள்ள அவதிப்படுவது முறையாகுமா?...... இந்த நூற்றாண்டிலும் ஆபேல்-காயினுடைய வரலாற்றுநிகழ்ச்சி நீடிக்கப்படுகின்றது. துரோகியை யாரும் குற்றம்சாட்டவில்லை. இதுதானா மனிதனுடைய வெற்றி? புதியபண்பாட்டின் புகழ்? ......" இந்தச்சொற்பொழிவு நிகழ்ந்த அதேநாள் இத்தாலிய ஜனாதிபதி **கிரொங்கி** மஸ்கோப் பயணத்திற்குப் புறப்பட்டிருக்கவேண்டும். சுகவீனத்தால் பயணம் பின்போடப்பட்டது. பாராளுமன்ற இடதுசாரிகள்சிலர் கருதினால் ஆண்டவரின்பேச்சு ஜனாதிபதியைக்குறித்துப் பேசப்பட்டதா? அப்படியானால் லத்தறன்உடன்படிக்கை முறிக்கப்பட்டதா?என்று பிரதமர் **செஞ்ஞியிடம்** கேட்டனர். பிரதமர் விவாதத்திற்கு உட்பட மறுத்துவிட்டார்.

மறுநாள்வெளிவந்த "**ஒஸ்ஸேர் வத்தோறே ரொமானோ**" — வத்திக்கான் தினத்தாள் சந்தேகம்ஒன்றிற்கும் இடம்வைக்கவில்லை. இடதுசாரிக் கட்சிகளுக்கும், கத்தோலிக்கருக்கும் ஒருவிததொடர்புமே இருக்கக்கூடாது. சோஷலிஸ்துகள் மார்க்ஸை வழிபடாதவர்களாய் இருக்கலாம்; கம்யூனிஸத்தை எதிர்ப்பவர்களாய் இருக்கலாம்; இருந்தும், கத்தோலிக்கருக்கும், அவர்களுக்கும் இணக்கம்என்பது நினைக்கமுடியாதது. "**ஒரேநேரத்தில் உத்தம கத்தோலிக்கனாகவும் — உண்மையான சோஷலிஸ்துவாகவும் இருக்கஇயலாது**" என்று அப்பட்டமாகக்கூறியது. இவைகள்ஒருங்கே சேர்ந்து அரசியல் வானிலே தலையைத் தூக்கியிருக்கின்றன.

## 2. சரித்திரமே பேசு !

இதேசமயத்தில்மஸ்கோவுக்குவேறுவேறுஎண்ணங்கள் உதித்தன. வாணவிளையாட்டுப்போட்டியில் இறங்கியது. தக்க தருணத்தில் சரித்திரஏடுகளைப் புரட்டியது. கிறீஸ்துஎன்று யாராவது வாழ்ந்ததுண்டா? இல்லை என்றால், '**கிறிஸ்மஸ்**' தோன்றிய வரலாறு என்ன? என்று வினாக்களைத் தொடுத்து மஸ்கோ றேடியோ பதில் அளித்தது. "**கிறீஸ்து ஒரு கட்டுக்கதை; கற்பனை விருந்து; கிறிஸ்மஸ் வேலையாட்களை அடிமையாக்கப் பயன்படும் முதலாளிகளின் சதி ......**" மஸ்கோவின் மட்டரமான சரித்திர அறிவு நல்லவேளையாக இரும்புக்கம்பிக்கு இப்பக்கம் தலைநீட்டுவதில்லை. இரண்டு நாட்கள்கழித்துப் பரிசுத்த தந்தை **அருளப்பர்** கூறினார்: "**இந்த மங்காதஉண்மையின் இரண்டாயிரவருட ஆராய்ச்சிக்குப் பின்னும், கிறீஸ்துபிறந்த தினத்தை இலேசாகக் கட்டுக்கதை என்று ஒருசிலர்கூறுவது வருந்தத்தக்கது.**" ஆமாம், வருந்தவேண்டும். சத்தியம் நிலைக்கும் என்று சரித்திரம் சங்கம்ஊதுவது எப்போது?

## 3. வத்திக்கான் வானொலி :

யூதமக்களுக்குஎதிராக உதித்த இனக் கிளர்ச்சி "குழுப் பைத்தியம்; அது பகுத்தறிவுக்கு முரண்பட்ட உணர்ச்சிகளான பயமும், விரோதமும் கலந்தது" என்று வத்திக்கான்வானொலி கூறியது. "வெறுக்கத்தக்க தீக்கொழுந்தாகிய இனவெறி"யின் தோற்றத்திற்குஎதிராக அவதானமாக இருக்கும்படி உலகத்தையும், இளைஞர்களையும் எச்சரித்தது. "பகை தன்னிலே தானே ஆபத்தானசக்தியைக் கட்டவிழ்த்துவிடும். ஆனால், அதனுடன் சேர்ந்திருக்கும் பயம் அளவற்றதாக இருக்கும்பொழுது ஆபத்து இன்னும் அதிகமானது." ஜேர்மனியிலும், மற்றும் மேற்கத்தியநாடுகளிலும் சிறுபான்மை யூதருக்குஎதிராகச் சென்றமாதம் கொதித்தெழுந்த கிளர்ச்சியை ஒட்டித்தான் வத்திக்கான்வானொலி பேசியது...... இலங்கைமக்களுக்கும், அதன் குரல்எட்டினால்!

## 4. கத்தோலிக்க உயிர்நாடி :

கத்தோலிக்கதிருச்சபை செழிப்பற்ற, வரட்சிபெற்ற சமுதாயமல்ல. அழகும், அருளும், வாழ்வும், வளர்ச்சியும் பொலிவுற்றுவிளங்கும் "மணமகள்." இருபது நூற்றாண்டுகளாக இளமைகுன்றாது வளம்பெற்றிருப்பதற்கு அதுதான்காரணம். பொதுக் கூட்டங்களும், திருச் சங்கங்களும் அதன்வாழ்வை வெளிக்காட்டுகின்றன. வளர்ச்சிக்குத் துணையாகவும் அமைகின்றன. இது சரித்திரம் கூறும்உண்மை. ரோமையில் நடந்த மேற்றிராசன சங்கமும் இதற்கு விளக்கம் தருகின்றது. அது சத்தியமறையின் சரித்திரஏட்டிலே புதிய ஓர் அத்தியாயத்தைப் பொறிக்கும் என்பதில் ஐயம் இல்லை. உரோமைக் கத்தோலிக்கருடைய சமயவாழ்க்கையைப் பொலிவுறச்செய்வது; அதன்வழியாய் மற்ற எல்லா மக்களுக்கும் உரோமைநகரை மாதிரிகையாக அமைப்பது. இவைதான் அதன் முழுநோக்கமும்.

மூன்றுநாட்களுக்குள் முடிந்துவிட்டது. ஆனால், அதற்கு வேண்டிய ஆயத்தவேலைகள் ஒருவருடம் நீடித்தன. ரோமை மேற்றிராசனத்தின் முதலாவதுசங்கம் லத்தறன்மகாதேவாலயத்தில் பரிசுத்தபாப்பரசரால் திறந்துவைக்கப்பட்டது. ஆயின் கூட்டங்கள் வத்திக்கான்மாளிகையிலேயே நிகழ்ந்தன. ஒருசிலர்மாத்திரம் பங்குபற்றுவதற்கு அழைக்கப்பட்டிருந்தனர். தவிர, ரோமான்குருமட, வேதபோதககுருமட மாணவர்களுக்கு மாத்திரம் விசேஷ சலுகை அளிக்கப்பட்டது. ஒவ்வொரு கூட்டத்திற்கும் பாப்பரசர் சமுகமாயிருந்தார். காலை 9 மணிக்குச் சிஸ்ரைன் ஆலயத்தில் நிறைவேறிய திவ்விய பூசையுடன் தொடங்கியது.

பூசைமுடிந்ததும் பாப்பரசரால் சொற்பொழிவுஆற்றப்பட்டது. அதைஅடுத்துச் சட்டமாகப்போகும் தொகுதிகள் வாசிக்கப்பட்டன. குருக்களையும், குருமாணவர்களையும் தவிர வேறெவரும் மண்டபத்தில் அனுமதிக்கப்படவில்லை. ஒருசில சட்டத்தொகுதிகளின்சாரம் வருமாறு :

215. கத்தோலிக்கர் பின்வருவனவற்றை அறிந்திருக்கவேண்டும்.
   (அ) சமூக சிக்கல்களை நேர்மையாகத் தீர்ப்பதற்கு எல்லோரும் தங்களால் இயன்ற உதவி புரியவேண்டும். கத்தோலிக்க சமய நல்லொழுக்க வழிகள் கூறும் கோட்பாடுகளின் உதவி இன்றி இவ்வகையான சிக்கல்களைத் தீர்க்கமுடியாது.
   (ஆ) கத்தோலிக்கர் திருச்சபையால் உதறியெறியப்பட்ட கோட்பாடுகளைப் பின்பற்றும் சமூகங்களில் செயலாற்றவோ, அவைகளுடன் ஒத்துழைக்கவோ கூடாது. அவைகள் : கம்யூனிஸம், சோஷலிஸம், சுயாதீனவாதம் முதலியன.

219. மோட்டர் வாகனங்கள் பாவிக்கும்போது தன்னுடையவும், மற்றவர்களுடையவும் உயிருக்கு விளையும் ஆபத்தைத் தடுப்பது மிகவும் கனமான கடமை.

220. கத்தோலிக்கர் கலைகளின் வளர்ச்சியைப்பொறுத்தவரை அக்கறையற்றவர்களாய்இருப்பதை விட்டு இறைவனின்புகழுக்கும், மனிதனின் மதிப்புக்கும், எல்லோருடையவும் பயனுக்கும், சமாதானத்துக்கும் வழிபுரிவதற்குக் கலைகளை வளர்க்கவேண்டும்.

இவைகள் ஒருசில. இவைகளைப்போலும் 770 தொகுதிகள் இருக்கின்றன. இன்னும் சட்டமாக வரவில்லை. நாட்கள் செல்லும். எது எதுவாக இருந்தாலும் இதயத்தின் மலர்ச்சி உடலின் நன்மைக்குத்தான்! ரோமை வாழ்ந்தால், உலகம் வாழும்!

---


## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2268**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

காரைநகர் வடக்கு
ஆறுமுகம் பூபாலபிள்ளை
— வழக்காளி.

எதிராக

காரைநகர் வடக்கு
முத்தையாபிள்ளை பொன்னுத்துரை
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2268-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1960-ம்ஞூ பங்குனிமீ 12-ம்உ சனிக்கிழமை முற்பகல் 9 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 5528-30-ம், ரூபா 4000-க்கு 11-6-58 தொடக்கம், 13-11-58 வரை 7% வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 503-55 சதமும். இதில் ரூபா 2000 கோட்டில் கட்டப்பட்டது.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி, காரைதீவுக் கோவிற்பற்று, வலந்தலையிறை "மங்கலவாகை" பர. நில. இலா. நாலரை ($4\frac{1}{2}$). பனைகள் வடலிகளும், புளியும், கிணறும். எல்லை: கிழக்கு — விசுவநாதர் கனகசபைக்கும், பங்காளர்கட்குமுரியவாதனம். வடக்கு —ஒழுங்கை. மேற்கு — வயித்திலிங்கபிள்ளை அப்பையாவிற்குரிய வாதனம். தெற்கு—ரோட்டு. இதடங்கலும். கட்டடத்தில் கிழக்குப்பக்கத்திலுள்ள பெரிய அறையும், அதைச்சுற்றித் தெற்குக் கிழக்குப்பக்கங்களிலுள்ள விறாந்தைகளும், பெரிய அறையின் வடக்குப்பக்கத்தில் மேற்கருகிலுள்ள விறாந்தை அறையும், விறாந்தை எல்லைச்சுவர்களில் அரைப்பாகமும். ஆனால்,மேற்சொலலிய கிணற்றில் மேற்கெல்லைக் காணிக்குரிய தண்ணீர்ப் பாகம் பிறநீங்கலாக.

**வை. ஏரம்பமூர்த்தி,**
கொம்மிஷனர்.

காரைநகர், 26-1-1960.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 237**

வண்ணார்பண்ணை கிழக்கு
கந்தர் பொன்னையா
கைம்பெண் சின்னத்தங்கம்
— வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 1683-ம் இலக்க மரணசாதன தத்துவ வழக்கில் S. முத்துக்குமாருவின் மரணசாதன தத்துவகாரன்

வண்ணார்பண்ணை மேற்கு
1. முத்துக்குமாரு பாலசிங்கம்

வண்ணார்பண்ணை கிழக்கு
2. வல்லிபுரம் அப்புத்துரையும்
3. மனோன்மணியும்
4. செல்லையா சின்னத்துரையும்,
5. பெண் சரஸ்வதியும்.

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 237-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர் துண்டுக் காணியை, 1960-ம்ஞூ பங்குனி மீ 19-ம்உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 5933-ம், 17-5-55 தொடக்கம், 29-9-55 வரைக்கும் ரூபா 3750-க்கு 8% வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 196-95 சதமும். இம்முதல் வட்டி ரூபாவில் ரூபா 5000 கொடுபட்டிருக்கிறது.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை கிழக்கிறை "அணிஞ்சிலடி" பர.நில.இலா. 1-ம், குளி 12-ம், வீடும், கிணறும், கொட்டிலும், மலகூடமும், இன்னும் அதற்குச் சேர்ந்தவைகளும். யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டு 144-ம் இல. பிரிவிடுதல் வழக்கில் 7-5-1944-ம் திகதி உலாந்தா J. D. வீரசிங்கத்தால் விஸ்தரிக்கப்பட்ட 1975-ம் இல. படத்தில் விஸ்தரிக்கப்பட்டபடி, எல்லை : கிழக்கு—ஒழுங்கை. வடக்கு—காலஞ்சென்ற செல்லத்துரை பெண் செல்லுக் கண்ணுப்பிள்ளையின் உரிமைக்காரரின் ஆதனம். மேற்கு—முகதின் ஆண்டவர் பள்ளிவாசலுக்குரிய ஆதனம். தெற்கு—காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் உரிமைக்காரரின் ஆதனம். இதடங்கலும்.

**அ. ஜெகநாதன்,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 6, 2-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.


---

✳ இலங்கையிலே முதன்முதலாக எந்தஆண்டில் புகையிரதம் ஓடியது?

1867-ம் ஆண்டில்.

✳ மாலைதீவுகள் எங்கே இருக்கின்றன?

இவைகள் இலங்கைக்கு மேற்கே இருக்கின்றன. இவைகள் சுமார் இரண்டாயிரம் தீவுகளைக் கொண்ட ஒருசிறு கூட்டமாகும். ஆனால், 215 தீவுகளிற்தான் சனங்கள் குடியேறி வசிக்கிறார்கள். அவற்றின் மொத்தக் குடிசனம் ஏறக்குறைய 92,000 பேர். இவர்கள் எல்லோரும் முஸ்லீம்கள். மாலைதீவுகள் 1953-ம் ஆண்டு தை மாதம் ஒரு குடியரசாகிப் பின்னர் 1954-ம் ஆண்டு ஓர் சுலுத்தானின் கீழ் முடியரசாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வத்திக்கான் - துருக்கி
## இராசீய உறவு

துருக்கியுடன் இராசீயஉறவு ஏற்படுத்தப் பட்டிருப்பதாய் அன்றுதிங்கட்கிழமை வத்திக்கான் அறிவித்துள்ளது. அருளப்பபாப்பரசர் துருக்கியிலே அப்போஸ்தலிக்க ஸ்தானபதியாய் இருந்தபோது செபங்களிலே துருக்கியபாஷை பிரயோகிக்கப்பட வேண்டுமென ஊக்கப்படுத்தியதையிட்டும், துருக்கிய பாஷையிலே சுவிசேஷம் வாசிக்கப்பட வேண்டுமென உத்தரவு பிறப்பித்ததையிட்டும் அந்நாட்டிலே மிகுந்த கண்ணியத்தையும், பாராட்டுதலையும் பெற்றிருந்தார். பரிசுத்த ஸ்தானத்தினிடமாக முதலாவது துருக்கியஸ்தானீகராய்த் தற்போது கிரேக்கதேச அதென்ஸ்நகரில் அதன்ஸ்தானீகராய் இருந்துவருகின்ற திரு. நூறெற்றின் ஸெர்ஜின்அவர்கள் நியமனஞ்செய்யப் படுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. துருக்கிய அர்சாங்கத்தினிடமாக வத்திக்கானிலுள்ள ஸ்தானீகராய் அங்கே தற்போது அப்போஸ்தலிக்க ஸ்தானாபதியாய் இருந்து வருகிறவரான வார்டன் அதிமேற்றிராணியார் நியமனஞ்செய்யப் படுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

---

### வத்திக்கானிடமாக
## 47 நாடுகள்

பரிசுத்தஸ்தானத்தினிடமாகத் தற்சமையம் பிறநாட்டு அரசாங்கங்களின் ஸ்தானீகர்கள் 33 பேரும், தூதுவர்கள் 10பேரும் இருந்துவருவதாக வத்திக்கான் இராச்சிய மந்திரிகாரியாலயம் வெளியிட்டுள்ள நாமாவலி தெரிவிக்கின்றது. கியூபர்நாட்டு ஸ்தானீகராலயமும், இந்தோனேஷிய தூதுவராலயமும் கிரமமானபிரதிநிதிகளைக் கொண்டனவாயில்லை. போலாந்துக்கும், லிதுவானியாவுக்கும் இருகாரியநிர்வாகஸ்தர்கள் இருந்துவருகிறார்கள். இருநாடுகளும் கம்யூனிஸ்த்அல்லாத முந்தியஅரசாங்கம் இருந்தகாலத்திலே வத்திக்கானிடமாக இருஸ்தானீகர்களைக் கொண்டிருந்தன.

---

### அர்ச்சியசிட்டபட்ட
## திருவைபவம்

அடுத்துவரும் பாஸ்குத் திருநாளுக்குச் சிலதினங்களின்பின் வலென்ஸியாநகர் அதிமேற்றிராணியாரராய் விளங்கியிருந்த முத். ஜுவான் டெ றிபேறுவுக்கு அர்ச்சியசிட்டபட்டம்சூட்டும் திருவைபவம் நடந்தேறவிருக்கிறது. இவர் ஸ்பானியதேச மூன்றுவது பிலிப்அரசரால் வலென்ஸியநாட்டின் 'வைஸ்றோய்' — அதாவது இராசப்பிரதிநிதியாகவும், கப்ரின்-ஜெனறலாகவும் நியமனஞ்செய்யப் பெற்றிருந்தார். இவர் அநேககோவில்களையும், கல்லூரிகளையும், தருமஸ்தாபனங்களையும் அமைத்து 1611-ம் ஆண்டு வலென்ஸியாவிலே காலஞ்சென்றார். 6-ம்பத்திநாத பாப்பானவர் 1796-ம்ஆண்டுஇவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளியிருந்தார்.

# ஜேர்மனிய கத்தோலிக்க தலைவர் பாப்பரசரைச் சந்தித்தார்

அருளப்பபாப்பரசர் சென்ற தைமாதம் 22-ந்திகதி வெள்ளிக்கிழமை ஜேர்மனிய சமஷ்டிக்குடியரசின் சான்ஸலர்— அதாவது தலைமைப்பிரதமரான டக்றர் கொன்றுட் அடினோர்அவர்களை ஆடம்பரமாகவரவேற்றுப் பிரத்தியேகபேட்டி யருளலாயினர். அவரை நல்வரவேற்றுத் தமது சோபனவாழ்த்தையும், ஆசீர்வாதத்தையும் ஜேர்மன்மக்களுக்கனுப்பிப் பாப்பரசர் சொற்பொழிவு நிகழ்த்தியதன்மேல் டக்றர் அடினோர்அவர்கள்பரிசுத்தபிதாவின் சுபசெய்திக்காக அவருக்கு நன்றிதெரிவித்தார். பேட்டிமுடிவிலே ஜேர்மன்சான்ஸலர் அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தைச் சந்தித்து, அங்கே திவ்வியநற்கருணைப் பலிபீடத்தின் முன்பாகவும், பின்தப் 12-ம்பத்திநாதபாப்பானவரின் கல்லறை முன்பாகவும் செபஞ்செய்யலாயினர்.

பிந்தியசெய்திப்படி இந்தப் பேட்டி— அதாவது 1949-ம் ஆண்டு சமஷ்டிக்குடியரசு ஆரம்பமானகாலமுதல் அதனைத் தலைமைவகித்துநடத்தும் றைன்லாந்தின் கத்தோலிக்க பிரமுகரான 84வயதுடைய டக்றர்கொன்றுட் அடினோர்அவர்களை முதன்முறையாக அருளப்பபாப்பரசர் சந்திப்பதற்குச் சந்தர்ப்பம்அளித்த இந்தப்பேட்டி ஆரம்பத்திலே திட்டமிடப் பட்டிருந்ததுபோல 20நிமிஷநேரமல்ல, ஆனல், இருமடங்குநேரம் நீடித்திருந்தது. இந்தப் பேட்டியில்அடங்கிய மற்றோர் விசேஷம்யாதெனில், ஜேர்மனிய வெளிநாட்டு மந்திரியான டக்றர் ஹென்றிக் வொன் பிறென்ரானோஅவர்களும் முழுநேரமும் சமுகமா யிருந்தமையேயாகும்.

—(—)—

### பாப்பரசரும்
## யூத தலைவர்களும்

நியூயோக்நகரைத் தனதுதலைமைஸ்தானமாகக்கொண்ட 'பி' ஞய் பி'றித்' எனப்படும் யூதர்களது சர்வதேச ஸ்தாபனத்தைச் சேர்ந்த பிரதமஅதிகாரிகள் நால்வர் அன்று திங்கட்கிழமை அருளப்பபாப்பரசரின் பேட்டிபெறுவதற்காக வத்திக்கான்மாளிகை சென்றனர். அப்பேட்டியிலே அவர்கள் அகிலமுழுவதிலும் சமீபத்தில்பரந்துள்ள யூதவிரோத கலகங்களின் பாரதூரமான காரியங்களைப்பற்றி அவரிடம்தெரிவித்தார்கள். பேட்டிமுடிவிலே இக்குழுவினரால் விடுக்கப்பட்ட அறிக்கையில், "பேட்டி மிகவும் திருப்தியளிப்பதாயும், அருளப்பபாப்பரசரிடமிருந்து கிடைத்த உறுதிமொழி அருள்நிறைந்ததாயும், சந்தோஷகரமாயும் இருந்தது" என்று அவர்கள்தெரிவித்தார்கள். இந்தக்குழுவினரிலே முன்சொன்ன யூத ஸ்தாபனத்தின் அமெரிக்கதலைவரும் அடங்கியிருந்தார்.

---

### லுத்தேர் சபையாரும்
## பழைய செபங்களும்

தென்மார்க்கின் தலைப்பட்டணமாகிய கோபெனுகென் நகரிலுள்ள லுத்தேர்சபை ஆசனக்கோவிலிலேநற்கருணை ஆராதனைகளில் கிறியெ, குளோறியா, அல்லேலூயா எனும் செபங்களைத் திரும்பவும் சேர்த்துக்காட்டியமாதிரிகையை அந்நகரிலுள்ள லுத்தேர்சபைக் கோவில்களெல்லாம் பின்பற்றியிருக்கின்றன. தென்மார்க்கிலே லுத்தேர்சபை வழிபாட்டைப் பரிசீலனைசெய்வதற்கான வழிவகையைச் சித்தஞ்செய்யும் ஆராய்ச்சிக்குழுஒன்று ஆற்றியுள்ளபணியின் முதலாவதுவிளைவாகவே அவைகள் திரும்பவும் சேர்க்கப்படலாயின. இவ்விதம் சேர்க்கப்பட்ட செபங்கள் ஒருபோதும் விலக்கப்படவில்லையென்றும் ஆனல், படிப்படியாகப் பாவனையற்றுப் போயினவென்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

---

### வத்திக்கான் இராச்சிய
## மந்திரியார்

தற்போது வத்திக்கான் இராச்சிய மந்திரியாராய் இருந்துவருகிறவரான கருதினல் தார்டினி ஆண்டவரிடமாக முன்னர் பரீஸ் நகரிலே பாப்பரசரின் ஸ்தானீகராய் இருந்துவந்தவரான கருதினல் மாறெல்லா ஆண்டவர் நியமனஞ்செய்யப்பட விருக்கிறரென ஏ. என். எஸ். ஏ. என்ற இத்தாலிய செய்திஸ்தாபனம் அறிவித்திருக்கிறது. இம்மாற்றத்திற்குக் காரணம், இன்னும் இரண்டு முதல் நான்குவருடங்களுள் நடைபெறவிருக்கின்ற திருச்சபைப் பொதுச்சங்கத்துக்கு வேண்டிய ஆயத்தங்களைச்செய்யக் கருதினல் தார்டினிஆண்டவருக்கு அதிகநேரம் கொடுப்பதற்கேயென்று அந்தஸ்தாபனம் தெரிவிக்கின்றது. பொதுச்சங்கத்துக்கான ஆரம்பஆயத்தங்களைத் தற்போது செய்துகொண்டுவரும் முன்னயத்த கம்மிஷனின் தலைவர் கருதினல் தார்டினிஆண்டவரே.

---

### பாப்பரசரும்
## அமெரிக்க ஜனதிபதியும்

அமெரிக்க ஜனதிபதி ஐஸன்ஹாவர்அவர்கள் சமாதானதூதுவராகச் சமீபத்திலே ஐரோப்பாவில்நடத்திய சுற்றுப்பிரயாணத்தின்போது, வத்திக்கான்மாளிகைசென்று பரிசுத்தபாப்பரசரையும் சந்தித்துப்போயினரல்லவா? அவர் சிலதினங்களின்முன் அமெரிக்க செனற்றர்களுடன் சம்பாஷித்தபோது, "பாப்பரசர் மக்களின் அனுதாபியாய்விளங்குகிறார்; அவர் எம்மைவிழித்து, திரு. ஜனதிபதி அவர்களே ஜெனறல்பதவியிலிருந்து ஜனதிபதிபதவிக்குவரத் தாங்கள்நெடுவழி தாண்டியிருக்கிறீர்கள்; ஆனல், நாம் சார்ஜன்பதவியிலிருந்து பாப்பானவர்பதவிக்கு வந்திருக்கிறோம்" என்று அன்பாக நம்மிடம் கூறலாயினர். முதலாவது உலகயுத்தத்தில் பாப்பரசர் ஓர்பட்டாள விசாரணைக்குரவராய் இருந்தார்என்பது ஈண்டுகுறிப்பிடத்தக்கது.

---

### அதிகம்சிறிய
## ஆசனக்கோவில்

உலகின்மிகச்சிறிய கத்தோலிக்க ஆசனக்கோவில்களில் ஒன்று லண்டன்நகரின் மத்தியிலே வருகிற கோடைகாலத்தில் கட்டியெழுப்பப்பட விருக்கிறது. 80 அடிநீளமும், 40 அடிஅகலமுமான இது அங்குள்ள உக்றேனிய கத்தோலிக்கரின் மேற்றிராசனக்கோவிலாய் இருந்துவரும். தனதுடோமிலே கிரேக்க சிலுவைஒன்றைக் கொண்டுள்ளதாய்க்கட்டப்படும்இந்தக்கோவில் 300பேருக்குப்போதிய ஆசனவசதிகளை யுடையதாயிருக்கும். இதனைக்கட்டிமுடிக்க ஏற்படும்செலவு 1,50,000 டலர். பிரித்தானியில் சஞ்சரித்துவரும் உக்றேனிய கத்தோலிக்கரின் விக்கார்ஜெனறலான வண. போல் மலுகாசுவாமியார் அன்றுபேசியபோது இந்தக்கோவில்அநேகமாய் லண்டன் நகரின் மத்தியில்தான் கட்டப்படுமெனத் தெரிவித்திருக்கிறார்.

---

### ஆபிரிக்கரான
## முதல்அதிமேற்றிராணியார்

ஆபிரிக்கரான முதலாவதுஅதிமேற்றிராணியாராய் 37வயதுடையவரான பேர்னடின் கான்ரின்ஆண்டவர் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். இவர் தற்போது பிரான்ஸிய சாம்பிராச்சியத்துடன் சேர்ந்துள்ளதும், மேற்காபிரிக்காவின் புதிய குடியரசுமாகிய டறிஹாமிநாட்டின் கோற்றோனோ நகர் அதிமேற்றிராணியாராகியிருக்கின்றார். முன்புஇவர் அம்மேற்றிராசனத்தின் பறிசொட்அதிமேற்றிராணியாரின் துணைமேற்றிராணியாராக இருந்துவந்தார். 1951-ம் ஆண்டு குருப்பட்டம்பெற்றஇவர் 1957-ம்ஆண்டு மேற்றிராணியாராயினர்.

---

### அர்ச். பாவிலுவானவரின்
## 19-ம் நூற்றுண்டு விழா

மோல்த்தாதீவு இவ்வருடம் அர்ச். பாவிலுவானவரை மகிமைப்படுத்தவிருக்கின்றது. அதாவது அவர்பிரயாணஞ்செய்த கப்பல் அத்தீவின்கரையில் சேதமடைந்தபோது அத்தீவில்முதன்முதலாக அவர்கால்வைத்த 19-ம் நூற்றுண்டுவிழாவைக் கொண்டாடவிருக்கின்றது. அடுத்தவருடம் றோமைநகரின் முறையாகும். அந்நகரின் மதில்களுக்கு வெளியேயுள்ள அர்ச். பாவிலுவானவர் மகாதேவாலயம் அவரதுகல்லறை இருந்துவருவதாகப் பாரம்பரியமாகச் சொல்லப்படும் இடத்திலேயே கட்டியெழுப்பப் பட்டுள்ளது. நூற்றுண்டுவிழா வருடத்துக்கு அம்மகாதேவாலயத்தைச் சித்தஞ்செய்யுமாறு அருளப்பபாப்பரசர் அதன்மடாதிபருக்கு எழுதியிருக்கின்றார்.

---

✳ தாவீது இராசா அநேகசெபங்களும், கீதங்களும் எழுதியிருக்கின்றார். இவைகள் தாவீது இராசாவின் சங்கீதங்களென்று அழைக்கப்பெற்று, வேதாகமத்தின் ஒருபகுதியாய் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருநாள் அட்டவணை

**மாசி — 1960**

| | | | |
|---|---|---|---|
| ஞா | 14 | சத்திரிகை ஞாயிறு — அர்ச். வலென்தீனுஸ், வி. ம. 2-ம் வகுப்பு. | (ஊ) |
| திங். | 15 | காலதினம்அர்ச். பவுஸ்தீனுவும், ஜோவிற்றுவும். மரி. பூசை | (ஊ) |
| செ. | 16 | காலதினம் மரி. பூசை | (ஊ) |
| புத. | 17 | காலதினம் மரி. பூசை | (ஊ) |
| வி. | 18 | காலதினம் அர்ச். சிமியோன் மரி. பூசை | (ஊ) |
| வெ. | 19 | காலதினம் மரி. பூசை | (ஊ) |
| சனி | 20 | மரியாயின் சனி | (வெ) |

சத்திய வேத
**பாதுகாவலன்**
1960-ம் ஆண்டு
மாசிமாதம் 11-ந் திகதி

## அடுத்துவரும் பொதுத் தேர்தல்

இலங்கையின் பன்னிரண்டாவது சுதந்திரதினம் வந்ததும் போனதுமாய் வந்துபோய்விட்டது. சுதந்திரம்பெற்றமக்கள் இம்முறையும்அதனை ஒரேமுகமாய் ஒருசுபதினமாய்க் கொண்டாடவில்லை. அவர்களில் ஒருபாலார் அதனை ஓர்துக்கதினமாகக் கொண்டாடினர். மற்றோர் பாலார் அதனைப்பெயரளவில் கொண்டாடியவரைப்போல் காட்சியளித்தனர். அரசியற்கட்சிகள் பல அதனைப்பகிஷ்கரித்துக் கொண்டன. இவ்விதம்வந்துபோன சுதந்திரதினத்தைஅடுத்து இலங்கைமக்கள் ஆவலோடும், அங்கலாய்ப்போடும் எதிர்பார்த்திருப்பது பொதுத்தேர்தல் தினமேயாகும். அதுவும் தூரத்தில் இல்லை. அதற்குஇன்னும் ஐந்து வாரங்கள்மாத்திரமே இருக்கின்றன. அது அண்மிவரவர அரசியற்கட்சிகளினதும், அரசியல்வாதிகளினதும் தேர்தல்பிரசாரங்கள் மும்முரமும், முக்கியத்துவமும் அடைந்துவருகின்றன.

சரித்திரம்கண்டறியாத கருமேகங்கள் சூழ்ந்திருக்கும் இச்சந்தர்ப்பத்திலே இலங்கையை ஆட்சிசெய்யவேண்டிய ஓர்அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கும் தருணம் எம்மைஇப்போது எதிர்நோக்கியுள்ளது. பெற்றசுதந்திரத்தைப் பேணிக்காப்பதும், அதிலே மத-இனவேறுபாடின்றிச் சகலமக்களுக்கும் சமஅந்தஸ்துஅளிப்பதும், அவர்களிடையே நேசபான்மையையும், நாட்டுப்பற்றையும் வளர்ப்பதும், நாட்டில்அமைதியும், சுபீட்சமும், நல்லெண்ணமும், சமாதானமும், நம்பிக்கையும், சந்தோஷமும் நிலவச்செய்வதுமான ஓர் நல்லரசாட்சியே இன்றுநாம் வேண்டுவது. நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடியகாலத்தில் மக்களிடையே இருந்துவந்து இன்று சிதைந்துபோயிருக்கும் ஐக்கியத்தைத் திரும்பவும் வரச்செய்யக்கூடிய — சுதந்திரத்தின்மகிமையை உணரவைக்கக்கூடிய— சுயநலத்தைமறந்து நாட்டின் முன்னேற்றத்திற்காகச் சேவைசெய்யத் தங்களைஅர்ப்பணிக்கக்கூடிய அரசியற்தலைவர்களைக் கொண்ட அரசாங்கம்ஒன்றே இன்று நமக்குத் தேவைப்படுவது.

அங்ஙனமாக, இன்றுஒன்றிற்கொன்று முரண்பட்ட அரசியற்கொள்கைகளைக்கொண்டனவாய் ஐந்தல்ல, பத்தல்ல, இருபத்தைந்துகட்சிகள் பொதுத்தேர்தலில் நானே, நீயோவென்று போட்டியிட்டுநிற்கும்போது— இலங்கையைப்போலும் ஓர்சிறிய நாட்டுக்கு இத்தனைகட்சிகளும் மட்டுக்குமிஞ்சியனவாய் இருக்கும்போது — ஒவ்வோர்கட்சியும் ஒவ்வோர்பக்கமாய் வாக்காளர்களை இழுத்துக்கொண்டுநிற்கும்போது, வாக்காளரெல்லாம் பல்வேறுகட்சிகளினதும் இலட்சியங்களையும், கொள்கைகளையும் அலசிஆராய்ந்து பொறுப்புணர்ச்சியுடன் தங்கள்வாக்குரிமைகளைக் கௌரவமாக நேர்மையானமுறையிலே உபயோகிக்கவேண்டும். புற்றீசல்கள் போன்று சந்தர்ப்பத்திற்கேற்றவாறு முளைத்திருக்கும் அரசியற்கட்சிகளிலே நாட்டில்மதவெறியையும், இனவெறியையும் துவேஷத்தையும், குரோதத்தையும் கிளப்பிவருங்கட்சிகளை வாக்காளர்கள் துவேஷித்து அவைகள் மீண்டும் தலைகாட்டாது அறவே ஒழித்துமட்டந்தட்டிவிடவேண்டும்.

நிற்க, வானில்பிரகாசிக்கும் சந்திரனைப்பார்த்துச் சுணங்கன் வாளாகுரைத்தாற்போன்று திரு. பிலிப் குணவர்த்தனவும், அவரதுபுதியதோழர் திரு. மெத்தானந்தாவும் பைசாசஆவேசம் கொண்டவர்கள்போல் கத்தோலிக்கரையும், கத்தோலிக்க சமயத்தையும் கண்டபடியெல்லாம் எதிர்த்துத் தங்கள் ஆவேசக்குரல்களை இன்னுமே எழுப்பிக்கொண்டும், ஆவேசமொழிகளை இன்னுமே அள்ளிக்கொட்டிக்கொண்டும் வருகிறார்கள். இத்தகைய ஆவேசக்குரல்களும், ஆவேசமொழிகளும் மக்களுக்குப் பேராபத்தை விளைக்குமென்பதை ஏனையஅரசியற்கட்சிகளின் தலைவர்களும், அரசியல்வாதிகளும் நன்குணர்ந்தவர்களாய் அவர்கள்மேல்பலமாகப்பலவாறு கண்டனக்குரல் எழுப்பிவருவது பாராட்டத்தக்கது.

அப்போது சிலரின்மதியீனச்செயல் சுதந்திரம்பெற்ற இலங்கைமக்களை இரண்டாகப் பிளவுபடச்செய்தது. இப்போது இவர்களின்துவேஷப்பிரசாரம் சிங்களவரையே இரண்டுபடுத்திவிடும்போல் இருக்கிறது. இதன் விளைவாய் நாட்டின்அமைதிக்குத் திரும்பவும் பங்கம்ஏற்படும்என்க.

---

### அரசாங்க ஊழியரின்ஆவல்

அடுத்துநிகழும் 1961-ம்ஆண்டின் ஆரம்பமுதல் அரசாங்ககாரியாலயங்களில் புதியமொழிக்கொள்கை நடைமுறைக்குக் கொண்டுவரப்படவிருப்பதால் அதற்கு முன்னரே பூரண பென்ஷன்உரிமையுடன் சேவையிலிருந்துஇளைப்பாற அநேக அரசாங்க ஊழியர்கள் திறைசேரியின்அனுமதியைக் கோரியுள்ளார்கள். சிலதினங்களின்முன் திறைசேரி வெளியிட்ட சுற்றறிக்கையிலே அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைப் பூர்த்திசெய்ய முடியாத அதிகாரிகள் இருந்தால் விரும்புமிடத்து அவர்கள்சேவையிலிருந்து இளைப்பாற மனுச்செய்துகொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால்,இதுபற்றிய முழுவிபரமும் இன்னும்வெளியாகவில்லை.

## கம்யூனிஸ்தர்களின் விழுகை

இந்தியாவின் வடஎல்லைப்புறமாகச் செஞ்சீன ஆக்கிரமிப்பு நடத்தியுள்ள ஒருசந்தர்ப்பத்தில் கேரள இடைக்கால சட்டசபைத் தேர்தல் நடைபெற்றதால் அதன்முடிவு யாதாகுமோவென்று இந்தியாவில்மாத்திரமல்ல, ஏனையபலநாடுகளிலுமே பெரும்அங்கலாய்ப்பு எழலாயிற்று. ஏனெனில், இந்தத்தேர்தல்ஜனநாயகத்திற்கும், கம்யூனிஸத்திற்குமிடையே நடைபெறும் ஓர்போராட்டமாகவே கருதப்பட்டது. இதன்விளைவாய்க் காங்கிரஸ்—பிரஜாசோஷலிஸ்த்—முஸ்லீம்லீக்காகிய மூன்றையும் அடக்கிய ஐக்கியஜனநாயக கூட்டுமுன்னணி — மற்றோர்விதமாகச் சொல்லுகில் கம்யூனிஸ்தஎதிர்ப்புமுன்னணி அங்கே இரண்டரைவருடகாலம் ஆட்சிநடாத்திய கம்யூனிஸ்தகட்சியை முற்றுகமுறியடித்துப் பெரும் வெற்றி ஈட்டியுள்ளது. அதாவது மூன்றுகட்சிகளினதும் கூட்டுமுன்னணியானது கேரளசட்டசபையின் 126ஸ்தானங்களிலும் 94ஸ்தானங்களைப் பெற்றுள்ளது. மூன்றுகட்சிகளிலும் காங்கிரஸ் 63ஸ்தானங்களையும், பிரஜாசோஷலிஸ்த் 20ஸ்தானங்களையும், முஸ்லீம்லீக் 11ஸ்தானங்களையும் கைப்பற்றிக்கொள்ளக் கம்யூனிஸ்தகட்சி 26ஸ்தானங்களையும், கம்யூனிஸ்தசுயேச்சை 3ஸ்தானங்களையுமே பெற்றுக்கொண்டன.

கலைக்கப்பட்ட கேரளசட்டசபையில் கம்யூனிஸ்தகட்சிக்கு 60ஸ்தானங்கள் இருந்தன. அது நான்குசுயேச்சைகளின் ஆதரவைப்பெற்றே ஆட்சிநடாத்திவந்தது. அன்று பிரதமர் நேரு கேரளத்திற்கு விஜயஞ்செய்தபோது, இமயத்தின் உச்சியில் சிவப்புக்கொடிபறக்க ஆரம்பித்துவிட்டது"என்று கம்யூனிஸ்தர்கள் கோஷமிட்டு ஆர்ப்பரித்தார்கள். ஆட்டுத்தோற்போர்வைக்குள்ளிருக்கும் இந்தஓநாய்களின் தந்திரங்களைப் பிரதமர்நேரு மட்டுமல்ல, இந்தியபொதுமக்களும் நன்குஅறிந்துள்ளார்கள். ஜனநாயகத்தைஅழிக்கமுனைந்துநிற்கின்ற கம்யூனிஸ்தர்கள் கேரளத்தில் படுதோல்வியுற்றார்கள். கம்யூனிஸ்தமந்திரிகள் பதினொருபேரில் எழுவரும் மண்கௌவினார்கள். நவீனகல்விச்சட்டம் ஒன்றைப்புகுத்திப் பெரும்கண்டனத்துக்குள்ளாய் நாட்டின் கல்விமுறையை அல்லோலகல்லோலப் படுத்திய கல்விமந்திரி ஜே. முண்டசேரியும் மண்கௌவினார். இந்தத்தேர்தலின்போது கேரளகம்யூனிஸ்தர்கள் எத்தனையோதிருவிளையாடல்கள் நடத்தியிருந்தும், பிறநாடுகளிலுள்ள கம்யூனிஸ்தர்களின் பணஆதரவு முதலாம் பலஆதரவுகளைப் பெற்றிருந்தும் அவர்கள் அடைந்ததோல்வியானது ஜனநாயகத்திற்குப் பெரியவெற்றியாக முடிந்தது. இந்தோனீஷியா, மலாய்நாடு, சிங்கப்பூர்முதலாம் இடங்களிலுள்ள கம்யூனிஸ்த ஸ்தாபனங்களிலிருந்து இத்தேர்தலுக்கு உதவியாய்க் கம்யூனிஸ்தகட்சிக்கு இருபது லட்சம்ரூபா அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் இந்தப்பணம் அவர்களுக்கு வெற்றியை ஈட்டிக்கொடுக்கவில்லை.

கேரளதேர்தல் முடிந்துவிட்டது. ஐக்கிய ஜனநாயகமுன்னணி வெற்றியடைந்து விட்டது. தேர்தலில்போன்று அதேஐக்கியத்துடன் இந்தமுன்னணி ஆட்சிநடத்துவதில்தான் கேரளத்தின்வருங்காலம் தங்கியிருக்கிறது. கம்யூனிஸ்தர்களை முற்றுகமுறியடிக்கக் காரணமாயிருந்த ஜனநாயககட்சிகள் ஐக்கியத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்து அவர்களால் நாட்டில்ஏற்பட்ட அல்லல்களையும், தொல்லைகளையும் அகற்றவேண்டும். இந்தஐக்கியமுன்னணி குலையுமானால், குலைந்து பிளவேற்படுமானால் ஆட்டுக்கடாச்சண்டையில் நரிஇரத்தம் குடித்தவாறாகவே கம்யூனிஸ்தர்கள் நடந்துகொள்வார்கள். ஜனநாயகஅரசாங்கம் கேரளத்தில் மீண்டும்தோல்விகண்டால் அதன்பிறகுவரும் கம்யூனிஸ்த அரசாங்கத்தை எளிதில்அகற்றிவிடுவது முடியாதகாரியமாகும். இலங்கையிலே பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கும் இந்தவேளையில் கேரளகம்யூனிஸ்தர்களின் தோல்வியானது தங்கள்பாடும் என்னவாகுமோவென்று இங்குள்ளகம்யூனிஸ்தர்களுக்குப் பெரும்அதிர்ச்சியை உண்டுபண்ணியிருக்குமென்று சொல்லவேண்டியதில்லை.

---

### பரிசுத்த பாப்பானவர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துக்கள்

**பொதுக்கருத்து:** ரோமாபுரியில் நடக்கவிருக்கும் திருச்சபைப் பொதுச்சங்கத்தின்பயனாக அந்நகரின் சமயப்பற்று புத்துயிருடன்தோன்றுமாறு வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** சீனாவில் வேதகலாபனைகளினால் வருந்தும் திருச்சபை அவ்வருத்தங்களைப் பயன்பெறஅனுபவிக்கக் கத்தோலிக்கஉலகம் முழுவதும் செபத்திலும், கிரியையிலும் ஒன்றுசேர்ந்து உதவுமாறு மன்றாடிக்கொள்வது.

---

### நெற்காணிச் சட்டம்

மட்டக்களப்பு, காலி, மாத்தறை, கழுத்துறையாகிய நான்கு பகுதிகளிலும் நடைமுறைக்குக் கொணடுவரப்படவிருந்த நெற்காணிச் சட்டத்தைக் கைவிடுவதென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதற்குக் காரணம் அச்சட்டத்தை விவசாயிகள் ஏற்றுக்கொள்ளாததேயாகும். அதனால் அதனை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு செய்யப்பட்ட ஏற்பாடுகளெல்லாம் நிறுத்தப்பட்டுள்ளன.

### பண்ணைக்கடல் போக்குவரத்து

சென்றபலமாதங்களாகத் திருத்தப்பட்டுவந்த மாருதப்புரவிஎன்ற யந்திரப்படகு திரும்பவும் பண்ணைக்கடலில் போக்குவரத்துநடத்தத் தொடங்கியுள்ளது. இதுபழுதடைந்தகாலமுதல் மிகவும்மோசமான நிலையிலிருந்த பண்ணைக்கடற் போக்குவரத்துச் சேவை இப்போது திருப்திகரமாக நடைபெறுகின்றது. மாருதப்புரவியிலே தற்போது புதியயந்திரங்கள் பொருத்தப்பட்டிருப்பதால் நெடுநாளைக்கு அதன்போக்குவரத்துச் சேவை சீராகநடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேர்தலும் பாடசாலைகளும்

பாராளுமன்றப் பொதுத்தேர்தலை முன்னிட்டு அடுத்துநிகழும் பங்குனி மாதம் 17-ந் திகதியும், 18-ந் திகதியுமாகிய இருதினங்களும் இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் விடுமுறையாயிருக்குமென்று கல்விமந்திரியாகவும் கடமைபார்க்கும் பிரதமர் தெரிவித்திருக்கின்றார்.

### பொதுத்தேர்தலும் தவறணைகளும்

பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கும்தினமாகிய பங்குனிமாதம்19-ந் திகதியன்றும், அதற்குமுதல்நாளும், அடுத்தநாளும் இலங்கையிலுள்ள சகலகள்ளுச் சாராயத்தவறணைகளையும் மூடிவிடுவதென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. பிறநாட்டுமதுபானங்கள் விற்பனைசெய்யப்படும் இடங்களும் அம்மூன்றுதினங்களிலும் மூடப்பட்டிருக்கும்.

### ஈரவெங்காய கட்டுப்பாடு

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து ஈரவெங்காயம் எடுத்துச்செல்வதற்கான கட்டுப்பாட்டைப் பிரதமர் மீண்டும் உண்டுபண்ணியிருக்கின்றார். ஆனால், தலைக்கு ஏழுறாத்தல் வெங்காயம் எடுத்துச்செல்லப் பெர்மிற்வேண்டியதில்லை. அதற்குமேல் எடுத்துச்சொல்லுகிறதானால் யாழ்ப்பாணப்பகுதிப் பதில்உணவுக்கட்டுப்பாடு அதிகாரியிடமிருந்து பெர்மிற்பெற்றுக்கொள்ள வேண்டும்.

### சீமெந்துத் தொழிற்சாலை

மேலதிகமாக ஒன்றரைலட்சம் தொன் சீமெந்து உற்பத்திசெய்வதற்கான யந்திரசாதனங்கள் காங்கேசன் துறைச் சீமெந்துத் தொழிற்சாலைக்குத் தருவிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைவாங்கியபின் மேலும் இருசுழலும் சூளைகளை வாங்குவதென்றும், இவற்றின்மூலம் வருடாந்த சீமெந்துஉற்பத்தியை 3லட்சத்து 9ஆயிரம்தொன்னாக அதிகரிக்கச்செய்யலாமென்றும் சீமெந்துக் கார்ப்பரேஷன் அதிகாரி ஒருவரால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### உலகஞ்சுற்றும் வாலிபன்

ஜேர்மனியைச்சேர்ந்த ஓர்சர்வகலாசாலை மாணவரான திரு. ஈ. சி. பெக் என்னும் வாலிபர் உலகத்தைக் கால்நடையாகச் சுற்றும்வழியில் தற்போது இலங்கையில் நிற்கின்றார். தான் ஜேர்மனியிலிருந்து இரண்டரைவருடங்களுக்குமுன் புறப்பட்டு இதுவரை பன்னிருநாடுகளைச் சுற்றிவிட்டதாக இவர் தெரிவித்திருக்கின்றார். இவர் தாய்நாடுசேர்ந்ததும் தனதுகால் நடைப்பிரயாணத்தைப்பற்றிப் பலநூல்கள் எழுதவிருக்கின்றார்.

### சோலிசிற்றர் ஜெனறல்

சொலிசிற்றர்ஜெனறல் திரு. எம். திருச்செல்வம் அவர்கள் தமதுபதவியிலிருந்து இளைப்பாறவிருக்கின்றார். வருகிறவைகாசிமாதம் 9-ந்திகதியிலிருந்து தாம் இளைப்பாறவிரும்புவதாக அவர் தெரிவித்திருக்கின்றார். தற்போதையபதவியில் தாம்பெறுகின்ற சம்பளம் போதாதிருப்பதால் தனிப்பட்ட முறையில் வழக்கறிஞராகக் கடமையாற்ற அவர்விரும்புகின்றார். இவர் தமிழ்ச்சர்வகலாசாலை இயக்கப்பணியில் ஊக்கமாகஉழைப்பவர். தமிழார்வம்மிக்கவர்.

### அரசாங்கமும் பாடசாலைகளும்

கம்பளையில் அன்றுநிகழ்ந்த தேர்தல் பிரசார கூட்டம்ஒன்றில் ஐக்கியதேசியக்கட்சித்தலைவர் திரு. டட்லி சேனநாயகாபேசியபோது, உதவிப்பணம் பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்வதானது இந்நாட்டில் சமயகல்விக்குக் குழிதோண்டுவதாகும்; அதனால் உதவிப்பணம்பெறும் பாடசாலைகளின்வளர்ச்சியை ஐக்கிய தேசியக்கட்சி ஒருபோதும்பாதிக்காது; சமயகல்விதான் மக்கள் ஒழுங்கும், கட்டுப்பாடுமான வாழ்க்கைநடத்தக் காரணமெனக் கூறலாயினர்.



அர்ச். அடைக்கலமாதா கோவில்

## ஞானவொடுக்கம்

எமதுகோவிலிலே வழமைப்பிரகாரம் தபசுகாலத்தின் ஐந்தாம் வாரத்தில்நடந்தேறிவரும்வருடாந்த ஞானவொடுக்கமானது, சதாசகாய மாதாவின் 400-ம்நோவனைக் கொண்டாட்டத்தைமுன்னிட்டு இவ்வருடம் மாசிமாதம் 18-ந்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 6-30மணிக்கு ஆரம்பமாகி 24-ந்திகதி புதன்கிழமை சதாசகாயமாதாவின் 400-ம்நோவனைக் கொண்டாட்டத்துடன் முடிவாகும் என்பதை அறிவிக்கின்றோம்.

ஞானவொடுக்க நாட்களில் சதாசகாயமாதாவின் பக்தர்கள் அனைவரும் ஞானவொடுக்கத்தில் பங்குபற்றித் தேவதாயாரின் விசேஷஆன்ம, சரீரசகாயங்களைப் பெற்றுப்போகுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

எஸ், ஏ. சுவாம்பிள்ளைசுவாமியார்,
பங்குக்குரவர்.

## லூர்து அன்னைக்கு அஞ்சலி

விருத்தம்

மலர்தலை உலகு மகிழ்ந்திட லூர்து
 மலைக்கெபி வந்தவளே!
மாசகல் தேசஸ்வி ளங்கவெண் ணுடையை
 மாண்பெனப் போர்த்தவளே!
நிலமிசை கற்பினைத் தலைமிசை கொள்கென
 நீலக்கச் சார்த்தவளே!
நேச திருச்செப மாலை கரத்தினில்
 நிலவிட நின்றவளே!
உலருகற் பாறையிற் குலவுமுள் ரேசினை
 உறுத்து பதத்தினளே!
ஓதுமெய்ஞ் ஞான சௌந்தரி யத்துடன்
 ஓர்ந்தருள் கூர்ந்தவளே!
நவவம லோற்பவ நாயகி! தாய்மரி
 நற்றுள் வழுத்துவமே
ஞானம ஞேகரி தீனத யாபரி
 நற்றுள் வழுத்துவமே.

புண்ணிய பூரண மானவ ளென்றுரை
 போற்றிய தூதுவரும்
பூவைய ருக்கொரு ஆசிர்நி றைந்தொளிர்
 பூங்கொடி யென்றவளும்
கண்ணிய மாசுணச் சென்னி நசுக்குவள்
 காரிகை யென்றவரும்
காலமெல் லாம்புகழ் சிலுவைப் போஸ்தலர்
 காக்குமெய்ஞ் ஞானியரும்
மண்ணினர் விண்ணினர் யாருமொ ரேமன
 வாக்குடன் வாழ்த்திவரும்
மன்னுயிர்க் கன்னையை என்னுயிர் காவியை
 மாசில் தவப்பயனாய்
நண்ணம லோற்பவ நாயகி தாய்மரி
 நற்றுள் வழுத்துவமே
ஞானம ஞேகரி தீனத யாபரி
 நற்றுள் வழுத்துவமே.

"ஞானி"

# கண்டதும் கேட்டதும்

### வால்பிடிப்பவர்கள்

"இலங்கையில் மட்டுமல்ல, தென்கிழக்கு ஆசியாமுழுவதிலுமே கம்யூனிஸ்தர்கள் ஒழித்துக்கட்டப் படுகிறார்கள். அவர்கள் புதியகம்யூனிஸ்த ஏகாதிபத்தியத்தின் தாசர்களும், ருஷியாவுக்கும், சீனாவுக்கும் வால்பிடிப்பவர்களுமாய் இருக்கிறார்கள் கோளத்தில் அமைதியான வாக்கெடுப்பின் மூலம் அப்போது தெரிவுசெய்யப்பட்ட கம்யூனிஸ்த அரசாங்கத்தையும் கூட மக்கள் வெறுத்தொதுக்கிவிட்டார்கள்."

திரு. டட்லி சேனநாயகா,
ஐ. தே. கட்சித்தலைவர்.

### பெரும்பான்மை இனம் உணரவில்லை

"எமதுஉரிமைகளைப் பெறும்வரை போராடத்தான்வேண்டும். ஆனால், அதன்பேரில் எடுக்கும்நடவடிக்கைகள் புத்திசாதுரியமானவைகளாய் இருக்க வேண்டும். தமிழ்மக்களுக்கு உரிமைகளை மறுக்க முற்பட்ட சிங்கள அரசாங்கம் அனுபவிக்கும் கஷ்டங்களும், நஷ்டங்களும் இதுவரையாவது அவர்களுக்கு நல்லநோக்கத்தைப் பிறப்பியாதது வருந்தத்தக்கதே. எந்நாட்டிலும் நிகழாதசம்பவங்கள் தானும் இலங்கையில் நடந்தும் பெரும்பான்மைஇனம் உணரமறுத்திருப்பது நாட்டின்முன்னேற்றத்திற்குப் பெருந்தடங்கலாகும்."

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்,
முன்னாள் யாழ்ப்பாண எம். பி.

### கிறீஸ்தவர்களுக்கு எதிரானபிரசாரம்

"உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்த வேண்டுமென்பதை நான் முற்றாகஎதிர்க்கிறேன். இப்பாடசாலைகளைத் தேசியமயமாக்க வேண்டுமென்றபிரசாரம் கிறீஸ்தவர்களுக்கு எதிராக நடத்தப்படும் பிரசாரமாகும். கம்யூனிஸ்தர்கள் இரகசியமாக இதை நடத்திவருகிறார்கள். உதவிப்பணம் பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கவேண்டுமென்ற இயக்கம் கம்யூனிஸ்தர்களது திட்டத்தில் ஒருபகுதியாகும். நான் உயிரோடிருக்கும்வரை இந்தநாஸ்திகப் பிரசாரகர்களுக்கு ஒருபோதும் விட்டுக்கொடுக்கமாட்டேன்."

பிரதமர் டபிள்யு. தஹநாயகா

### அதேகதிதான் அவற்றிற்கு

"உதவிநன்கொடைபெறும் பாடசாலைகள் எங்கள்சீவநாடிகள். இப்பாடசாலைகளைத் தேசியமயமாக்கினால் உங்கள்பிள்ளைகளிடையே கடவுள்பக்தி இல்லாமல்போய்விடும் நான் கிறீஸ்த பாடசாலைஒன்றில் கல்விகற்றதினால் இன்று ஒருசிறந்த புத்தனாக இருக்கிறேன். எங்கள் தேசியஸ்தாபனங்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றன என்பதை நீங்கள்அறிவீர்கள். பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டால் அதேகதிதான் அவற்றிற்கும்ஏற்படும். ஆகவே, உதவிப்பணம்பெறும் பாடசாலைகளைத் தேசியமயமாக்குவதற்குப் புத்தராகிய நீங்கள் ஆதரவு அளித்தீர்களேயானால் உங்கள் பிள்ளைகள்தான் கஷ்டத்திற்குள்ளாவார்கள்."

பிரதமர் டபிள்யு. தஹநாயகா.

### சகலமதங்களுக்கும் சமஅந்தஸ்து

"ஐக்கியதேசியக்கட்சியின் (யு. என். பி.) ஆட்சியில் எல்லாமதங்களுக்கும் சம அந்தஸ்து இருக்கும். ஒருமதத்தை உயர்வாகவும், மற்றொருமதத்தைத் தாழ்வாகவும் மதிக்கும்எண்ணம் எனக்கு அறவேகிடையாது. என்னுடைய மதமான புத்தமதத்தில் நான்எவ்வளவு மதிப்பும், மரியாதையும் வைத்திருக்கிறேனோ அதேஅளவுக்கு மற்றமதங்களையும் நான்மதிக்கிறேன். இந்தத்தேர்தலில் என்னுடையகட்சி படுதோல்வியடைந்தாலுங்கூட என்னுடையமதத்தையும், ஏனையமதங்களையும் நான் தூஷிக்கவோ, அவமதிக்கவோமாட்டேன். சரித்திரப்பிரசித்திபெற்ற மாபெரும் புத்தரான அசோகசக்கரவர்த்தி இந்தியாவில் மற்றெல்லாமதங்களுக்கும் பூரணபாதுகாப்பு அளித்தார் என்பதை நாம்மறந்துவிடக் கூடாது."

திரு. டட்லி சேனநாயகா,
ஐ. தே. கட்சித்தலைவர்.

✻ எந்தஆண்டில் இலங்கை முதன்முதலாகத் தபால்முத்திரையைப் பாவனைக்கு விடுத்தது?

1857-ம் ஆண்டில்.

✻ ஆங்கிலத்தில் சொல்லப்படும் பிரியதத்த மந்திரத்தில் 42 சொற்கள் அடங்கியிருக்கின்றன. தமிழ்மொழியிலே சொல்லப்படும் பிரியதத்த மந்திரத்தில் எத்தனை சொற்கள் இருக்கின்றன? எண்ணிப்பார்த்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

✻ 757-ம் ஆண்டு முதல் 767-ம் ஆண்டுவரை திருச்சபையை ஆட்சி செய்த முதலாவது செண்போல் பாப்பானவர் தமக்குமுன் திருச்சபையை ஆட்சிபுரிந்த மூன்றாவது ஸ்தீபன்பாப்பானவரின் உடன்பிறந்த சகோதரர் என்பது உங்களுக்குத் தெரியுமா?

✻ அநேகவருடங்களின்முன் றோமைப் போர்வீரர்கள் தங்கள் சம்பளத்தில் ஒருபகுதியாகச் "சால்ற்" (Salt) அதாவது, உப்புக் கொடுக்கப்பட்டார்கள். இது "சேலாறியம்" (Salarium) என அழைக்கப்படலாயிற்று. ஆனால், இப்போது எவருக்கும் சம்பளமாக உப்புக் கொடுபடுவதில்லை. என்றாலும் அவர்கள் பெறும் சம்பளம் "சலாறியம்" என்பதிலிருந்து திரிந்துவந்த "சலறி" (Salary) என்னும் சொல் இன்னும் வழங்கப்படுகின்றது என்பது உங்களுக்குத் தெரியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

**அன்புமிக்க இளைஞர்களே !**

சில வருடங்களின் முன்னே ஒரு வாலிபன் தன் சிநேகிதர்களுடன் துலையான கிராமமொன்றிற்கு மீன்பிடிப்பதற்காக அழைக்கப்பட்டான். இப்புதிய இடத்தில் கோவில் எங்கேயோவென்று ஐமிச்சப்பட்டு, பயணம் செல்லமுன் தனது ஊர்க் குருவானவரிடத்தில் தான் அக்கிழமை ஞாயிறு பூசைகாண முடியாமலிருக்குமென அறிவிக்கச் சென்றான். குருவானவரோ வாலிபன் செல்லுமூரிலுள்ள கோவில் எங்கேயிருக்குமென்று சொல்லிக்காட்டி, பூசைக்குக் கட்டாயமாகவே போகவேண்டுமென்றும் வற்புறுத்தியனுப்பிவிட்டார்.

சில கிழமைகளின்பின் குருவானவர் வாலிபனைச் சந்திக்க நேரிட்டபோது, மீன்பிடித்தொழில் விஷயமாய் மறு ஊருக்கு அவன் சென்றிருந்தவேளையில் நடந்துகொண்ட மாதிரியையிட்டு வினவினார். அதற்கு அவன் புன்னகையுடன் சொன்னதாவது: "சுவாமி, நான் ஞாயிற்றுக்கிழமையன்று பூசை தவறவில்லை. அதையிட்டுப் பயப்படாதேயுங்கள். என்னுடனிருந்த சிநேகிதர் யாவரும் அஞ்ஞானிகள். சனிக்கிழமையிரவு நான் அடுத்தநாள் பூசைக்குப் போவதாக அவர்களுக்குச் சொன்னபோது. யாவரும் குலுங்க நகைத்தார்கள். என்னைக் "கோவில் பூனை" என்று பரிகாசம்பண்ணினார்கள். நானோ கிறுங்கவில்லை. பூசைமுடிந்தபின்னேதான் அவர்கள் மீன்பிடித்துக்கொண்டு நின்றவிடத்திற்குப் போனேன். இரண்டு மணித்தியாலங்கள் பிந்திவிட்டது. ஆயினும், சாயந்தரம் நாங்கள் வீடுதிரும்பியபோது அவர்கள் எல்லாரும் சேர்ந்து, பிடித்த மீன்தொகையிலும்பார்க்க என்னுடையதோ மிகவும் அதிகமாயிருந்தது. அப்போதுதான் அவர்கள் நீங்கள் எனக்குச் சொன்ன புத்திமதியின் உண்மையை ஞாபகத்தில் வருவித்தார்கள். ஞாயிற்றுக்கிழமை பூசைகாணவேண்டுமென்ற கடமையைப் பிரமாணிக்கமாய் அனுசரிப்பவர்களைத் தேவன் அவர்கள் கையாடும் ஒவ்வொன்றிலும் ஆசீர்வதித்து வைப்பார்" என்று.

இவ்வாலிபனின் அனுபவத்தைப்போல், ஆயிரமாயிரம் வேறுபேரும் அனுபவித்திருக்கிறார்கள். எத்தனையோ பரிகாசங்கள், அவமானங்கள், கஷ்டங்கள் பட்டு ஞாயிற்றுக்கிழமைப் பூசையைக்கண்டுவரப் பிரயாசப்பட்டவர்களைத் தேவன் எல்லோரும் உணரத்தக்கவிதமாய் ஆசீர்வதித்திருக்கிறார். "நீங்களும் என் தோட்டத்தில் பிரவேசித்து வேலைசெய்யுங்கள், நீதியின்படி சம்பாவனை தருவேன்" என்று சொல்லியருளிய தோட்டத்தின் எசமானுக்குச் சமானமாய், ஞாயிறு பூசைக்கடனைத் தீர்ப்பதற்காய்த் தேவாலயத்துள் பிரவேசிக்கும் எமக்கும், நாங்கள் அதில் அனுபவிக்கும் கஷ்டங்கள், சிறுப்பனைகளிலும் பார்க்க, அதிகமான ஆசீர்வாதங்களைத் தேவன் நிச்சயமாய்த் தந்தருளுவார்.

ஞானப்பிதா

—※—

# தபசுகாலத்தின் முன்வரும் சத்திரிகை ஞாயிறு

## "நீங்கள் சோம்பலாய் நாள்முழுவதும் இங்கேநிற்பானேன்"

**அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்கு உவமையாகத் திருவுளம் பற்றினதாவது:**

பரலோக இராட்சியமானது தன் திராட்சைத் தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்தும்படி அதிகாலமே வெளியிலே புறப்பட்ட வீட்டெசமானுக் கொப்பாயிருக்கிறது. அவன் வேலையாட்களோடு நாள் ஒன்றுக்கு ஒருபணம் கூலியாக ஒப்பந்தஞ் செய்து, அவர்களைத் தன் திராட்சைத் தோட்டத்துக்கு அனுப்பினான். ஏறக்குறைய மூன்றும் மணி நேரத்திலும் அவன் வெளியே புறப்பட்டுக் கடைவீதியில் சும்மா நின்றுகொண்டிருந்த சிலரைக் கண்டு: நீங்களும் என் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள். நியாயமானபடி உங்களுக்குக் கூலி கொடுப்பேனென்று அவர்களுக்குச் சொன்னான். அவர்களும் போனார்கள். மறுபடியும், அவன் ஆறும், ஒன்பதாம் மணியிலும் வெளியே புறப்பட்டுப்போய் அவ்வண்ணமே செய்தான். ஏறக்குறையப் பதினோராம் மணிநேரத்திலும் அவன் வெளியே புறப்பட்டுப்போய் வேறு சிலர் நிற்பதைக்கண்டு: நீங்கள் சோம்பலாய் நாள்முழுவதும் இங்கே நிற்பானேன் என்று கேட்க, அவர்கள் எங்களை ஒருவரும் வேலைக்கு அமர்த்தவில்லை என்றார்கள். அவன் நீங்களும் என் தோட்டத்துக்குப் போங்கள் என்றான். பிறகு, பொழுது சாய்ந்தபோது தோட்டத்து எசமான் தன் காரியகாரனைப்பார்த்து, நீ வேலையாட்களைக் கூப்பிட்டுக் கடைசியாட்கள் துவக்கி முதல் ஆட்கள்வரைக்கும் (சரி) கூலிகொடு என்றான். பதினோராம்மணிநேரத்தில் வந்தவர்கள் அணுகி ஒவ்வொருபணம் வாங்கினார்கள். அப்போது, முந்தியவர்கள்வந்து தாங்கள் அதிகமாகப் பெற்றுக்கொள்வோமென்று எண்ணியிருந்தார்கள். ஆயினும், அவர்களும் ஒவ்வொருபணம் வேண்டினார்கள். அதை வாங்குகையில் அவர்கள் வீட்டெசமான்பேரில் முறையிட்டுக் கடைசியில் வந்த இவர்கள் ஒருமணிநேரம் வேலைசெய்திருக்க, பகலின் பாரத்தையும், வெயிலின் கொடுமையையும் பாராது சுமந்த எங்களோடு இவர்களையும் சமமாக்கினீரே என்றார்கள். எசமான் மறுமொழியாக, அவர்களில் ஒருவனை நோக்கி: நண்பனே நான் உனக்கு அநியாயஞ்செய்யவில்லை; நீ ஒருபணத்துக்கு என்னோடு பொருந்திக்கொள்ளவில்லையா? உனக்குள்ளதை வேண்டிக்கொண்டு போ; உனக்குக் கொடுத்தபடியே கடைசியில் வந்த இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம். எனக்கு இஷ்டமானதை நான் செய்யலாகாதா? அல்லது நான் நல்லவராயிருப்பதால் உன் கண்கள் கெட்டவையாயிருக்கிறதா? என்றான். இவ்விதமே கடைசியானவர்கள் முதல்வர்களாகவும், முதல்வர்கள் கடைசியானவர்களாகவும் இருப்பார்கள். ஏனெனில், அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சொற்பப்பேர் என்று திருவுளம்பற்றினார்.

மானிட வாழ்க்கைக் கண்ணாடியிற் காட்டினாற்போல் விளக்கி நிற்கும் ஓர் உண்மை இது. நாம் செய்யவேண்டியதாகிய சில கடமைகளைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றுவோமாயின் எமக்கு இரட்சணியம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கின்றது.

எனினும், எம்முள் எத்தனைபேர், தேவனின் இரக்கத்தில் முறையற்ற விதமாய் நம்பிக்கை வைத்துக்கொண்டு, தாங்கள் காட்டவேண்டியதாகிய ஒத்தாசையைக் காட்டாமல் விடுகின்றனர். பிற்காலம்பார்ப்போமென்று இளம் வயசில் சொல்வார்கள். காலம் பிந்திவிட்டதென்று முதிர்வயசிற் சொல்வார்கள். இந்தச் சாட்டுப்போக்குகள் எவ்வளவுமடைமைத்தனமுள்ளவையென்று மேற்சொன்ன உவமை காட்டுகின்றது. தேவனுக்கு ஊழியம் செய்யத் தொடங்குவதற்குக் காலம்போய்விட்டதென்று சொல்வது உண்மையல்ல.

எந்நேரத்திலுமிருந்து அவருக்கு ஊழியஞ்செய்யத் தொடங்கலாம். எமது அசமந்தமே தடையாயிருக்கின்றது. மற்றெந்த விஷயத்தையுமிட்டு நாம்காட்டும் ஊக்கம் எமது ஈடேற்ற அலுவலில் நாம் காட்டுவதில்லை. நாட்பூசை, கிழமைப் பாவசங்கீர்த்தனம், தேவநற்கருணை முதலியவை எவ்வளவு இலேசாக எம்மால் தள்ளிவைக்கப்படுகின்றன.

மேற்சொன்ன உவமையில் வேலையாட்கள் சொன்ன சாட்டுப்போக்கைப்போல், "எங்களை ஒருவரும் வேலைக்கு அமர்த்தவில்லை" யென்று நாமும்மனச் சாட்சியின்படி சொல்ல முடியாது. ஏனெனில், தேவனே எம்மைத் தமது ஊழியத்தில் அமர்த்தியிருக்கிறார். இவ்வூழியத்தில் நாமே ஊக்கமின்றி இருக்கிறோமேயொழிய மற்றும்படியல்ல. ஏதோவொருபாவப்பழக்கம் எம்மை இழுத்து வைத்திருக்கின்றது—பணமோ, சிற்றின்பமோ, பெருமையோ, எரிச்சலோ, சோம்பலோ எதுவோ:

தேவனே எம்முடன் தாராளமானவிதமாய் நடக்க, நாமும் அவர் மட்டில் தாராளமான மனசுடன் ஏன் நடக்கமுடியாது. "இங்கே நிற்கிறதிலும்பார்க்க" த் தேவனின் தோட்டத்துள் சென்று ஊழியம் செய்வோமாக. நாம்பண்ணும் பல ஊழியத்திற்கும் தகுந்த சம்பாவனை அவர் தருவார்.

# எத்தனைபேர்? பலிகள் எத்தனை?

— மேரி றேசலீன் சூசைப்பிள்ளை

அன்று புதன்கிழமை கோவிற் கதவண்டை நீண்டஅங்கியுடன்பன்னிரு வயதுப் பாலியன் ஒருவன் காணப்பட்டான். பூசை ஆரம்பமாகி முடிவடைந்தது பாலியன் ஒருதாளில் எதையோ குறித்துக்கொண்டான். வயோதிபர் ஒருவர் இதை அவதானித்தார். தொடர்ந்து நான்குநாட்கள் இவ்வண்ணம் சம்பவித்தமையால் சிறுவனிடம் இதைக் கேட்டறிய விரும்பினார் கிழவர். ஐந்தாம் நாள் எல்லோரும் சென்றுவிட்டனர். சிறுவன் எதையோ சரிபிழை பார்ப்பதுபோல் காணப்பட்டான். வயோதிபர் சிறுவனிடம் சென்றார். சம்பாஷணை தொடங்கிற்று.

கிழவர்: "தம்பி, பூசைக்கு வருபவர்களின் தொகையைக் குறித்து வைக்கிறாய்போல் இருக்கிறதே."

சிறுவன்: "ஆம் தாத்தா."

கிழவர்: "நாள்தோறும் சுமார் 150 பேர்களாவது இங்கு பூசைக்கு வருவார்களே."

சிறுவன்: "நீங்களே பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள் தாத்தா." (கடதாசியை நீட்டுகிறான்)

கிழவர்: "சாதாரண நாட்களில் 15, 10, 5, 20 எனக் குறித்திருக்கிறாயே."

சிறுவன்: "நேரில் கண்டவற்றைத்தான் குறித்திருக்கிறேன் தாத்தா."

(குறிப்பைத் தொடர்ந்து கவனித்துக்கொண்ட கிழவன் ஆச்சரியத்துடன்)

கிழவர்: "என்ன, ஞாயிற்றுக் கிழமை ஆக 35 பேர் பூசைகண்டதாகக் குறித்திருக்கிறாயே. அன்று கோயில் நிரம்பச் சனங்கள் இருந்தபடியால் நான் கோயிலுக்குள் வரும்பொழுது தடக்கிவிழுந்ததை நீயும் கண்டிருப்பாயே."

சிறுவன்: "ஆம் தாத்தா, ஞாயிற்றுக்கிழமை கோயில் நிரம்பும் அளவில் சனங்கள் பூசைக்கு வந்திருந்தது மெய்தான்."

கிழவர்: "பின் ஏன் இப்படிக் குறைத்து எழுதியிருக்கிறாய்"

சிறுவன்: "இதுதான் முக்கியமான கட்டம். கவனமாய்க் கேளுங்கள் தாத்தா. ஞாயிற்றுக்கிழமை பூசைக்கு வருபவர்களில் நூற்றுக்கு 50 சதவீதமானோர் கடமையைமுன்னிட்டு வருபவர்கள். அன்றும் பூசைகாணக் கடனில்லாவிட்டால் மகிழ்ச்சிகொள்ளுமளவிற்கு அசமந்தமான மனப்போக்குள்ளவர்கள். எப்போ பூசைமுடியும் என்று இருப்பார்கள். இன்னும் சிலர் (பெண்கள்) இயன்றமட்டும் தங்களை அலங்கரித்துக்கொண்டு வந்திருப்பார்கள். பூசைவேளையிலும் தங்கள் அலங்காரத்தைச் சரிப்படுத்துவதற்குத்தான் அவர்களுக்கு நேரம் சரியாக இருக்கும். இத்தகையோரால் மற்றவர்களுக்கும் பராக்காகஇருக்கும். மற்றவர்களும் பக்தியுருக்கமாகப் பூசைகாணுதபடி தடுக்கப்படுவார்கள். இன்னும்சிலர் அன்று ஓய்வுநாளாயிற்றேஎன்று அன்றையதினத்தைக் குஷியாகச் செலவிடுவதற்கான வழிவகைகளை ஆராய்ந்தவண்ணம் இருப்பார்கள். வழக்கமாய்ப் பக்தியுடன் பூசைப்பலியை ஒப்புக்கொடுக்கும்பக்தர்களையும் ஞாயிற்றுக்கிழமையின் சூழ்நிலை சற்று அயரச்செய்துவிடும். எனவே, நான் இங்கு குறித்திருப்பது பூசைக்கு எத்தனைபேர் வந்தார்கள் என்பதல்ல. ஆனால், எத்தனைபேரால் ஒப்புக்கொடுக்கப்பட்ட "திருப்பலிகள்" தேவ சமுகத்தில் அங்கீகரிக்கப்படத் தகுதி பெற்றன என்பதுதான்."

கிழவர்: "அப்படியானால் நான் இவ்வளவுநாளும் பங்குபற்றிய பூசைப்பலிகளில் எத்தனைநாட்பங்குபற்றி ஒப்புக்கொடுத்த பூசைப்பலிகள் தேவனுக்கு மகிமைவருவிப்பனவாய், தேவனுக்கு நன்றித்துதி கூறுவனவாய், தேவசமுகத்தில் அங்கீகரிக்கப்பட்டனவோ தெரியாது?"

சிறுவன்: "இது மிகவும் உத்தமமானதும், எல்லோருக்கும் பயன் அளிக்கக்கூடியதுமான ஓர் வினாதான் தாத்தா. ஒவ்வொருவரும் தன்னைத்தானே இக் கேள்வியைக் கேட்டுக்கொண்டால் நல்லது தாத்தா."

கிழவர்: "அதிருக்கட்டும், தம்பி நீர் யார்? எங்கிருந்து வந்தீர்?"

சிறுவன்: "நான்தான் தேவசமுகத்தில் பலியை ஒப்புக்கொடுக்கும் தூதன்." (இறக்கைகள் பிரகாசத்துடன் வெளிப்படுகின்றன. தேவதூதன் மறைகிறார்.)

(யாவும் கற்பனையே.)

# உறுதிவாக்காளர் பகுதி

1. **புதிய வாக்காளர் :**

(11) மனுவற்பிள்ளை ஜேக்கப் — ஈச்சமோட்டை
(12) இ. இஞ்ஞாசிமுத்து — திரிகோணமலை
(13) ஜெ. ஹிப்பொலிட் — கொச்சிக்கடை
(14) யோ. எல்மோ பீரிஸ் — பேசாலை
(15) பயஸ் வஸ்தியாம்பிள்ளை — யாழ்ப்பாணம்
(16) சவிரிமுத்து மேரிபவஸ்தீனு — கரம்பன்.

2. இம்மாசத்தில் தங்களது பிறந்த நாளைக் கொண்டாடும் பின்வரும் வாக்காளர்களுக்குத் தேவ ஆசியையும், இளைஞர் பக்கத்தின் பேரால் மனமுவந்த சோபனமும் கூறுகின்றோம். (14) யோ. எல்மோ பீரிஸ் மாசி 10. (16) சவிரிமுத்து மேரி பவுஸ்தீனு மாசி 17.

3. உறுதி வாக்காளர்களின் நற்கருத்தும், வீரியசெயலும் தினந்தோறும் இத்தாபனத்தில் நடந்துவரும் நற்கருணை எழுந்தேற்றத்தின்போதும், திவ்விய பூசைவேளையிலும் நினைவுகூரப்பட்டு வருகின்றது. "வாலிபவயசில் உன் தேவனை மறவாதே" என்ற வேதவாக்கியத்தை நடைமுறையில் காட்டுவதற்காய்த்

[ தொடர்ச்சி 8-ம்பக்கம் ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

[redacted]

உங்கள் அன்புள்ள அண்ணு.



## அர்ச்சியசிட்டர்கள் விநோதப் பிறவிகளா?

அர்ச்சியசிட்டர்கள் உலக வாழ்விலே எதைத்தேடினுர்கள்? அழியாத புண்ணியத்தைத் தேடினுர்கள். அவர்களோ துன்பத்திலும் இன்பம் கண்டனர். அவர்களுடைய வாழ்வில் அன்பு, சாந்தம், பொறுமை, கற்பு, இரக்கம், கீழ்ப்படிதல் என்பன நிறைந்து பொலிந்து கிடந்தன. அர்ச்சியசிட்டர்கள் என்றவுடன் ஏதோ அபூர்வப் பிறவிகள் என்று நாம் எண்ணிவிடுகிருேம். ஆனுல், அவர்களும் நம்மைப்போன்றவர்களே.

நாம் இன்று வாழ்க்கையில் அனுபவிக்கும் கஷ்டங்கள் அவர்களுக்கும் இருக்கத்தான் செய்தன. சமூகத்திலும் அவர்கள்நம்மைப்போல உறுப்பினராய் இருந்தனர். அவர்களிற் சிலர் அரசராக இருந்தனர். சிலர் ஆண்டிகளாக வாழ்ந்தனர். இவ்வாறு அர்ச்சியசிட்டர்கள் உலகில் சீவித்த காலத்தில் ஒரே அந்தஸ்தில் இருந்தவர்களல்ல. அவர்கள் விநோதப் பிறவிகளுமல்லர்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் அர்ச்சியசிட்டராகவர அயராது உழைப்போமாக.

— தி. பாக்கியராசா

## நான் வளர்க்கும் செல்லப் பிராணி

[ தைமாதக் கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்றது.]

நான் எனது உயிரிலும் மேலாக ஒரு கிளியை வளர்க்கிறேன். அதை நான் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குக் கொண்டுவந்தேன். அதற்கு நான் 'ராணி' என்ற செல்லப் பெயரிட்டு அழைக்கிறேன்.

ஒவ்வொருநாளும் காலையில் எழுந்தவுடன் "மரியாயே வாழ்க!" என்று ராணிக்குச்சொல்லிக்கொடுப்பது எனக்கு வழக்கமாகிவிட்டது. இப்பொழுது ராணி வீட்டில் உள்ள எல்லோருடைய பெயரையும் கூறி அழைப்பாள்.

நான் அவளுக்குக் காலையும், மாலையும் உணவு கொடுத்து வருகிறேன். அவள் பப்பாசிப்பழம், வாழைப்பழம், மிளகாய்ப்பழம் இவை போன்ற உணவுகளை மிகவும் விரும்பி உண்ணுவாள். ராணி வீட்டில் ஒருவரையும் தண்டிக்க விடமாட்டாள். ராணி எங்கள் வீட்டுக்கு 22-1-54-ல் கொண்டுவரப்பட்டாள். இப்போது ராணிக்கு ஆருவது வயது பூர்த்தியாகி இருக்கிறது.

நான் எனது ஓய்வு நேரத்தை ராணியைக் குளிப்பாட்டுவதிலும், அவளுக்கு உணவூட்டுவதிலும், பேச்சுப் பழக்குவதிலும் செலவழித்து வருகிறேன்.

டேவிற் யேசுதாசன்,
கொழும்பு.

## கட்டுரைப் போட்டி

தம்பி, தங்கையரே!

நாம் ஆரம்பித்த கட்டுரைப் போட்டியில் பலர் ஆர்வம் காட்டியிருந்தீர்கள். ஆனுலும், அதுபற்றிய பூரண விளக்கம் இல்லாத காரணத்தால் தவறுகள் பல சுட்டிக் காட்டவேண்டி இருக்கின்றது. கட்டுரைப் போட்டியிலே கலந்து கொண்டவர்கள் — காலைக் காட்சியைப்பற்றி எழுதியவர்கள் பாடசாலைப் புத்தகங்களில் உள்ள கட்டுரைகளையோ, அன்றேல் வேறு சஞ்சிகைகளில் வெளியான கட்டுரைகளையோ அப்படியே பார்த்தெழுதி அனுப்பியிருந்தனர். இது 'இரவல்' சொத்து.

உங்கள் உள்ளங்களில் தோன்றும் கருத்துக்களை உங்கள் வசனநடையிலே பிழையின்றிச் சிறு சிறு வசனங்களாக எழுதவேண்டும். உங்களுடைய கிராமச் சூழலிலே காலைப்பொழுது எப்படி இருக்கும்? அவ்வேளை அவதானிக்கக் கூடியது என்ன? என்பதை எழுதியிருந்தால் நன்ருயிருந்திருக்கும். 300 சொற்கள் என்றும் குறிப்பிட்டிருந்தோம். ஆனுல், விடயங்கள் 300 சொற்களுக்குக் குறைவாக இருக்கவேண்டுமேயன்றி, மேற்படக்கூடாது. விடயங்கள் எப்பொழுதும் சுருக்கமாகவும், தாளின் ஒருபக்கத்தில்மாத்திரம் எழுதப்பட்டதாகவும் இருக்கவேண்டும்.

இன்னும் பாஷை கற்பிக்கும் ஆசிரியருடைய அனுசரணையுடன் கட்டுரை வரையப்பட வேண்டும் என்ற விதியை ஒருவரும் கவனிக்கவில்லை. பாஷை ஆசிரியர் கட்டுரைப் பிரதியிலே கையொப்பமிடவேண்டும்.

அடுத்து, விடயங்கள் அனுப்பும்போது வயது குறிப்பிடப்படவில்லை. பிறந்த திகதி குறிப்பிடப்படுதல் விரும்பத்தக்கது. அத்துடன் வகுப்பும் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும்.

மேற்கூறிய குறிப்புக்களை நன்கு அவதானித்து இனிவரும் போட்டிகளிற் சரியாகப் பங்குபற்றிக்கொள்ளுங்கள்.

இம்முறை முதலிடம் பெறும் செல்வன் டேவிற் யேசுதாசனுடைய 'நான் வளர்க்கும் செல்லப் பிராணி' என்னும் கட்டுரையைப் படிக்கத் தவருதீர்கள். தம்பி, உமது ஊக்கம் வளர்க!

## விடுகதை

தும்பியுண்ணுப் பூ மலரும்
காயுமுண்டு
சோறுமுண்ணுர் பசியாது
வயிறுமுண்டு
வெம்பியதோர் பழம் பழுக்கும்
எடுப்பார் தின்னுர்
சம்பதனுல் வேய்ந்ததல்ல
வீடுமுண்டு
அம்புவியில் இப்பொருள்
ஆராய்ந்து அறைகுவீரே.

விடை : டைகப

செல்வி நீ. மேரி பிலோமினு,
கைதடி.

# கண்டதும் கேட்டதும்

### பாதுகாப்பு எதற்காக?

"ஏழைகளைப் பாதுகாக்கவே உள்நாட்டுப்பாதுகாப்பு மந்திரிகாரியாலயம் ஒன்றை நிறுவினேன். மதத்துவேஷங்களைக் கிளப்பிவரும் திரு. பிலிப் குணவர்த்தனபோன்ற சத்துருக்களிடமிருந்து மக்களைக்காப்பாற்றவே இந்த மந்திரிகாரியாலயம் நிறுவப்பட்டது."

பிரதமர் டபிள்யு. தஹநாயகா

### பசுத்தோல் போர்த்தபுலி

"திரு. மெத்தானந்தாவுடன் சேர்ந்துகொண்டு புத்தமத இரட்சகரென்று தன்னைச்சொல்லிக்கொள்ளும் திரு. பிலிப் குணவர்த்தனவின் விஷயத்தில் கவனமாயிருக்கும்படி உங்களுக்கு எச்சரிக்கைசெய்கிறேன். பசுத்தோல் போர்த்த புலிஅவர். மத-இனத் துவேஷத்தைஉண்டுபண்ணி நாட்டைக் குட்டிச்சுவராக்கி அதிகாரத்துக்குவர அவர்முயல்கின்ருர்."

திரு. டட்லி சேனநாயகா,
ஐ. தே. கட்சித்தலைவர்.

### சிங்களகலாசாரமே அழிந்துவிடும்

"கம்யூனிஸ்தர்களின் விஷயத்தில் வாக்காளர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதற்குக் கேரளதேர்தல் முடிவுகள் நல்லதோர்பாடமாகும். கேரளமக்களின் முன்மாதிரியைப்பின்பற்றி இந்நாட்டுமக்களும் கம்யூனிஸ்தர்களைத் துரத்தியடிக்கவேண்டும். திரு. பிலிப் குணவர்த்தன சிங்களவரிடையே சமயப் பிணக்குகளை உண்டுபண்ணுவதன்மூலம் ரெம்பிள்றீஸ்மாளிகையில் பிரவேசிக்க முயற்சிக்கிருர். அவர் இருக்க[illegible] அல்ல நரகமேயாகும்; சிங்களமக்களிடையே சமயச்சண்டைகளை மூட்டிவிடுவதுதான் அவரின் நோக்கம். புத்தருக்கும், கத்தோலிக்கருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டால் சிங்களகலாசாரமே அழிந்துவிடும்."

பிரதமர் டபிள்யு. தஹநாயகா

### தோல்வியே அடைந்தார்

"வாழ்க்கைச்செலவைக் குறைக்கப் போவதாகத் திரு. பண்டாரநாயகா பொதுமக்களுக்குஅளித்த வாக்குறுதியை நிறைவேற்றும்பொறுப்பைத் திரு. பிலிப் குணவர்த்தனவிடம் ஒப்படைத்தார். அதனுல்தான் பிலிப் உணவுமந்திரியாக நியமிக்கப்பட்டார். ஆனுல், அவரிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பில் பிலிப் தோல்வியே அடைந்தார். நாளொருவண்ணம் வாழ்க்கைச் செலவு விஷம்போல ஏறிக்கொண்டே வந்தது."

திரு டட்லி சேனநாயகா,
ஐ. தே. கட்சித்தலைவர்

### தமிழினம் உறுதிபூண்டுள்ளது

"இன்றுநேற்றல்ல, ஆனுல், பல ஆண்டுகளாகத் தமிழினம் உரிமை இழந்து அல்லற்படுகின்றது. இழந்த உரிமைகளைப் பெறும்முயற்சியில் இன்று தமிழினம் எவ்விததியாகத்தையும் மேற்கொள்ள உறுதிபூண்டுள்ளது. சுதந்திரம்என்பது விரைவிலேபெற்றுவிடக்கூடிய ஒன்றல்ல. தியாகத்தாலும், மனஉறுதியான உழைப்பினுலுமே இதைப்பெற முடியுமென்பதை உலகவரலாறுகள் நமக்கு எடுத்துக் [illegible]. தமிழர்ஒவ்வொருவரும் இதில்பங்குகொண்டு உழைக்க முன்வரவேண்டும்."

திரு. வி. ஏ. கந்தையா
முன்னுள் ஊர்காவற்றுறை, எம். பி.

### தெற்கேதலையும் வடக்கேவாலும்

"டக்றர் என். எம். பெறேருவின் மொழிக்கொள்கை வேடிக்கையானது. அவர் தெற்கேதலையையும் வடக்கேவாலையும்காட்டும் விலாங்குமீனை ஒத்தவர். துணிவிருந்தால் சிங்களம்மட்டும் சட்டத்தை நீக்கிவிடுவேனென்று அவர் கூறட்டும். சமஅந்தஸ்துக்கோரி நான் 1956-ம்ஆண்டு பாராளுமன்றத்தில் பிரேரணைசமர்ப்பித்தபோது சமசமாஜிகள் அதனை ஆதரிக்கவில்லை. இன்று தமிழ்மொழிக்குச் சமஅந்தஸ்துத்தருவதாய்ப் பேசுகிருர்கள். இதை எவ்வாறு நம்புவதுஎன்று நான்கேட்கின்றேன். மொழிக்கொள்கைபற்றிச் சமசமாஜிகள் தெற்கேகொடுக்கும் வியாக்கியானம் வடக்கில்உருமாறுகிறது."

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்,
முன்னுள் யாழ்ப்பாண எம். பி.

● அதிகாரபூர்வமாகக்கோவைக்கு விஜயஞ்செய்துள்ள போர்த்துக்காலின் மந்திரி சபாநாயகரான திரு. தியோட்டோனியோ பெறேய்ரு அவர்களும், அவருடன் கூடவந்தவர்களும் தரிசித்துப் பக்திசெய்யுமாறு அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் திருமேனியானது சென்ற தைமாதம் 10-ந் திகதியன்று கல்லறை திறந்து காட்சிக்கு வைக்கப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறுதிவாக்காளர் பகுதி

[இளைஞர்பக்கத் தொடர்ச்சி]

தாங்கள் முன்வந்திருப்பதாக இவர்கள் உணரக்கடவர். திவ்விய பூசைப்பலியில் பங்குபற்றுவதும், அடிக்கடி நற்கருணை பெற்றுவருவதும் தன்நல்லெண்ணத்தைப் பூர்த்தி செய்வதற்கு இன்றியமையாக் கருவிகளென மதித்து நடக்கக்கடவர்.

## மரண அறிக்கை

யாழ்ப்பாணவாசரும், சம்பத்திரிசியார் கல்லூரிப் பழையமாணவரும், கொழும்பு மேக்கன்ரைல் வங்கியில் கடமையாற்றிய வருமான திரு. ஜே. அல்பேட் அவர்கள் சென்ற 11-1-60 இல் மரணத்திரையில் மறையலாயினர். மரிக்கும்போது இவருக்கு வயது 42. இவர் யுத்தகாலத்தில் 1942-ம் ஆண்டில் பிரித்தானிய இராணுவ 8-ம் படையில் சேவைபுரிந்து காயமடைந்தவர். பின்னர், சிங்கப்பூரில் 1944-ம் ஆண்டில் தளபதி லோட் மவுண்ற் பேற்றன் பிரபுவின் தென்கிழக் காசிய படையில் இலிகிதராகக் கடமை யாற்றியவர். மற்றும் ஜெருசலேம் முதலாம் யாத்திரைத் தலங்களைத் தரிசித்துத் திரும்பியவர். இவரை இழந்து துயருறும் மனைவியர், பிள்ளைகள் அறுவரோடு இதனைக்கண்ணுறும் கிறிஸ்தவ சகோதரராய நாமும் அவரது ஆன்மசாந்திக்காக வேண்டுவோமாக.

கி. சூசைப்பிள்ளை.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M.B. 1622**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

உரும்பிராய்

1. நாகமுத்து கந்தையாவும்
2. பெண் பகவதியம்மாவும்

— வழக்காளிகள்.

எதிராக

கொழும்புத்துறை

1. பொன்னையா சுந்தரமும்
2. பெண் இலட்சுமியும்

— எதிரிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 1622-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஓர் துண்டுக் காணியை 1960-ம் ஆண்டு பங்குனிமாதம் 15-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 5266-ம், இன்னும் ரூபா4-000 த்திற்கு 10-5-57 தொடக்கம், 12-6-58 வரையும் 100-க்கு 10% வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும 100-க்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 259-15 சதமும். இதில் ரூபா 125 செலவுக் கணக்கால் கொடுபட்டது.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோயிற்பற்று, கொழும்புத்துறை இறை "மடதிப்புலம்" பெரியபுலம் வயலும், மறுபிரிவுகளும். ப. நி. இ. 10 குளி 3½ யும், கிணறும், கொட்டில்களும், பயிர்வகைகளும். எல்லை: கிழக்கு—ரேட்டு. வடக்கு — கையொழுங்கை மேற்கு — தம்பு பெண் பாக்கியத்தின் ஆதனம். தெற்கு — தெண்டாயுதபாணி கோவில் ஆதனம். இதடங்கலும்.

**செ. இரத்தினசபாபதி,**
கொம்மிஷனர்.

**35, 4-ம் குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம். 9-2-60**

## நன்றித் துதி


பரிசுத்த பன்னிரண்டாம் பத்திநாத பாப்பாண்டவருடைய மன்றாட்டினல் நான் இரந்து கேட்டுக்கொண்ட ஓர் வேண்டுதல் கிடைக்கப்பெற்றேன். நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

எம். எஸ்.

## தலைவில்
## பங்குனித் திருநாள்
## 7-3-'60 — 10-3-'60

பங்குனி 3 : கொடியேற்றம் ஒவ்வொரு [redacted]

## 4-ம் வருட
## மரண ஞாபகம்



*"என்னைச் சீவியத்தில் நேசித்தவர்களே! என்னை மரணத்தில் மறவாதீர்."*

**பிறப்பு: 22-7-88 இறப்பு: 18-2-56**

எனது நேசபத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய **ஸ்ரீமான் அலேசுப்பிள்ளை பிரான்சீஸ்பிள்ளை** அவர்கள் இவ்வுலகை நீத்த நான்காவது வருடம் இம்மாதம் 18-ந் திகதி வியாழக்கிழமை பூர்த்தியாவதால், அன்றுதினம் அவருடைய ஆத்துமஇளைப்பாற்றிக்காக யாழ்ப்பாணம் ஆசனக்கோவிலில் ஓர் துக்கப் பாடற்பூசை நிறைவேறும்.

இதைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளும், சங். சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளும், உறவினர்—சிநேகிதர்களும், ஏனையோரும் அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக விசேஷவிதமாய் வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறேம்.

நேசபத்தாவை இழந்து துன்புறும்
**லூர்துமரி—பிரான்சீஸ்பிள்ளை**
அருமைத் தந்தையை இழந்து
துயருறும் பிள்ளைகள்:
**சங். சிஸ்றர் மேரி பிறசன்ரேசன்**
(திருக்குடும்ப மடம்)
**சங். சிஸ்றர் குழந்தையேசுவின் மேரி கலிஸ்ரா**
(கார்மேல் மடம்)

## பிழை திருத்தம்

சென்ற 28-1-60-இல் வெளிவந்த 'பாதுகாவல'னிலே இல. 599 T என்ற இலக்கத்தைக்கொண்ட கோட்டுவிற்பனவு விளம்பரத்தில் 1906-ம்ஆண்டு மாசிமாதம் 20-ந்திகதி சனிக்கிழமை என்று இருப்பதை 1960-ம்ஆண்டு மாசிமாதம் 20-ந்திகதி சனிக்கிழமை பிற்பகல் 4மணி என்று திருத்திவாசித்துக்கொள்ளுக.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

என்றும் சகாயப்புரியும் பரிசுத்த சதாசகாய மாதாவின் கிருபையினல் நான் வேண்டினதின்படி என் கணவருக்கிருந்த நோய் குணமடைந்ததையிட்டு இதைப் பிரசுரிக்கிறேன். பரிசுத்த சதாசகாய மாதாவின் நாமம் என்றும் புகழப்படுவதாக.

சூசைப்[illegible]
பெரிய கல்லாறு.

## பரிசளிப்பு விழா

நிகழும் மாசித்திங்கள் ஐந்தாம்நாள் வெள்ளிவாரம் காலை 10மணியளவில் வட்டக்கச்சிக் கத்தோலிக்கபாடசாலைப் பரிசளிப்புவிழாசின்னயேசுசபைத்தலை [redacted] யாசிரியர் திரு. சி. வின்சென்ற அவர்கள் பாடசாலையின் வருடாந்த அறிக்கையை வாசிக்கையில் குறிப்பிட்டார்.

"கத்தோலிக்கமக்கள் அதிகமாகவதியும் குடியேற்றதிட்டங்களில் இதுவும் ஒன்று. எனவே, இப்பாடசாலை கிளிநொச்சிப்பகுதியில் ஓர்உயர்தரபாடசாலையாக விளங்கவேண்டும் அதற்குப் பெற்றோர்களாகிய உங்களின் ஒத்துழைப்பு மிகஅவசியமானது. சிறுதொகைமாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று எழுபதுக்கதிகமான மாணவர்களையும், எட்டாம் வகுப்பையும் கொண்டுள்ளதாக இருப்பதைக் காணும்போது நான்மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்" இவ்வாறு கிளிநொச்சி விசாரணைப்பங்குக் குரவர் வண. சூசைநாதர்சுவாமியவர்கள் விழாவில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

பின்னர், வண. போல்சுவாமியவர்களால் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. ஈற்றில் தலைமை ஆசிரியரின் நன்றியுரையுடனும், மாணவர்களின் நடனம், நாடகம்முதலிய கதம்ப நிகழ்ச்சிகளுடனும் விழாமுடிவெய்தியது.

— நிருபர்.

## அறிவித்தல்

ஆசிரிய கலாசாலைப் பிரவேச வகுப்புகள் யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் பாடசாலையில் ஆரம்பமாகிவிட்டன. மாணவ, மாணவிகள் 15-2-60 வரை அனுமதிக்கப்படுவர்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனது மகனின் சுகவீனம் அறிந்து மிகவும் கவலையுடையோனாய், யேசு இரட்சகரிடமும், பரி. சதாசகாயமாதா (மருதமடுத்தாயார்), (லூர்துநாயகி), அர்ச். சூசையப்பர், அந்தோனியார், மாட்டின்தே போறஸ், தொன்பொஸ்கோ இவர்களிடமும் அவரதுசுகத்திற்கு மன்றாடி, திவ்வியபூசை கண்டுஇல்விடம்வந்தபோது இருந்தகடின வருத்தம் நீங்கி மகன் சுகநிலையிலிருப்பதாக வந்த தபாற்கடிதம்கண்டு மகிழ்ச்சியானேன். எல்லோருக்கும் எனது தாழ்மையான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்னும் என் ஏழை மகனுக்குப் பூரண சுகம் உண்டாகப் பிரார்த்திக்கிறேன்.

கொழும்பு, எம். எவ். அன்ரனி.

* * *

## நன்றித் துதி

பரிசுத்த சதாசகாயமாதாவிடமும், அர்ச். யூதாததேயுவிடமும் நான் கேட்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன். அவர்களின் நாமம் என்றும், யாவராலும் போற்றப்படக்கடவது.

மிருசுவில், ஓர் அடியாள்

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2861**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

[redacted] காணியை 1960-ம்ஆண்டு பங்கு [redacted] 10-ம்உ வியாழக்கிழமைமுற்பகல் 9 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 2210-ம், ரூபா 2000-க்கு 8-6-1959 தொடக்கம், 8-9-59 வரை 6 வீதமான வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 216-25 சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம்டிஸ்திறிக் தீவுப்பகுதி, காரைதீவுக் கோயிற்பற்று, வலந்தலையிறை "நீலிப்பந்தனை" பர. நில. இலா. ஒன்பது. (பர. நில. இலா. 9) பனைகள் வடலிகளும், வான்பயிர், செய்பயிர்களும், வீடுகளும், கிணறும். எல்லை: கிழக்கு—செல்லையா இராசையாவிற்குரிய வாதனம். வடக்கு—முத்தையா பெண் சின்னக்குட்டிக்கும், கணபதிப்பிள்ளை நாகமணிக்கும், பெண் பொன்னம்மாவிற்குமுரிய வாதனங்கள். மேற்கு—ஒழுங்கை. தெற்கு—நல்லதம்பி விசயரெத்தினத்திற்கும், மறுபேர்கட்குமுரிய ொதனம். இதடங்கலிலும் சொரியலாய் $\frac{4}{5}$ பாகமும், அதற்குரியவைகளும். மேற்கெல்லைக்காணியிலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பாகமும், மேற்கெல்லையிலிருக்கும் ஒழுங்கைப்பாகமும், வழிவாய்க்காற் பாவிப்புரித்தும்.

**வை. ஏரம்பமூர்த்தி,**
கொம்மிஷனர்.

காரைநகர், 2[illegible]-1-1960.

## தேர்தலும் ராக்ஸிகளும்

பொதுத்தேர்தல் நடைபெறும்தினமன்று வாக்களிக்குமாறு வாக்காளர் ஒருவரும், அவர்குடும்பத்தினரும் வாக்களிக்கும்நிலையத்திற்கு ராக்ஸியில் செல்வது சட்டமுறைக்கு ஒத்ததாகும். ஆனல், இந்தராக்ஸியில் தனது குடும்பத்தார்அல்லாத ஒருவரை அவ்வாக்காளர் வாக்களிக்கும்நிலையத்திற்கு வாக்களிக்கஎடுத்துச்சென்றல் அது தேர்தல்சட்டத்தை மீறியகுற்றமாகும். வாக்காளரை ஏற்றிச்செல்லுமாறு அரசியற்கட்சிகள் ராக்ஸிகளை வாடகைக்குஅமர்த்துவதும் குற்றமாகும்.

● அமெரிக்க காலாட்படைவீரர்களின் பரலோகபாதுகாவலராக அவர்களைப்போலும் ஓர்காலாட்படைவீரர் அருளப்பட்டிருக்கிறர். அர்ச். மோறிஸே இந்தப்பரலோகபாதுகாவலர். இவர் மக்ஸிமியன் ஹெர்க்கியூலியஸ் சக்கரவர்த்தியின் படைவகுப்பில் ஓர் காலாட்படைஅதிகாரியாய் இருந்துவந்து, அஞ்ஞானதேவர்களுக்குப் பலி செலுத்த மறுத்தகாரணமாகத் தமது போர்வீரர்கள் 6,600பேருடன் கி. பி. 287-ம்ஆண்டு வேதசாட்சியாகக் கொலையுண்டார்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 11-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org